வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 13.07.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 222 | பக்கங்கள் : 16

# ராஜபக்ஷ குடும்ப நிறுவனமாக மாறி வருகிறது இலங்கை அரசு!

## சுட்டிக்காட்டுகிறது நியூயோர்க் ரைம்ஸ்


The New York Times

*In Sri Lanka, the Government Looks Increasingly Like a Family Firm*

Three brothers of President Gotabaya Rajapaksa now hold top posts in his government. Two of his nephews have official positions, too.



நியூயோர்க், ஜூலை 13

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ராஜபக்ஷ குடும்பத்தின் நிறுவனமாக மாறி வருவதாக நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவின் மூன்று சகோதரர்கள் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்து வருவதாகவும் அவர்களின் புதல்வர்களுக்கும் அதிகார மிக்க பதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

15

## வவுனியாவில் இருவருக்கு டெங்கு!

வவுனியா, ஜூலை 13

வவுனியாவில் இருவருக்கு டெங்கு நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் அவ்வப்போது மழையுடன் கூடிய காலநிலை தொடர்கின்றது. இதனால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் காரணமாக டெங்கு நோய் தாக் கம் ஏற்பட்டு

15

## அரியவகை சுறாவுடன் ஐவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 13

பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்ட அரியவகை சுறா இனமான 'த்ரெசர்' சுறாவை பிடித்து வெட்டி விற்பனை செய்ய முயன்ற 5 பேர் மயிலிட்டி துறைமுகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஐவரும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் என்று நீரியல்வளத் திணைக்களத்தினர்

15

## கொரோனா தொற்றினால் மேலும் 31 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் மேலும் 31 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

பெண்கள் 15 பேர், ஆண்கள் 16 பேர் என இவ்வாறு 31 பேர் உயிரிழந்தார்.

15

## நேற்றும் 1,488 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,488 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 76 ஆயிரத்து 26 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்

15

## பிறந்த சிசுவை எரித்து கொன்ற தாய் திருமலையில் கைது!

திருகோணமலை, ஜூலை13

தனக்குப் பிறந்த குழந்தையை எரித்துக் கொன்றார் என்ற குற்றச்சாட்டில் தாயார் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - கந்தளாய் - பேராறு - மத்ரஸா நகரை சேர்ந்த 35 வயதான மூன்று பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த பெண்ணின் கணவர் நீண்டகாலமாக

15

## தனிமைப்படுத்தல் சட்டம் ஊடாக ஆர்ப்பாட்டத்தை அடக்க முடியாது

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் பொலிஸாருக்கு எதிராக போர்க்கொடி

கொழும்பு, ஜூலை 13

"தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது."

- இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்.

இது தொடர்பில்

15

## யாழில் 19 பேர் உட்பட வடக்கில் 23 தொற்றாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 19 தொற்றாளர்கள் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று மட்டும் 23 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் நேற்று 688 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்படி, கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், யாழ். போதனா மருத்துவ

15

## சட்டவிரோத கருக்கலைப்பால் இளம் தாய் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 13

பொகவந்தலாவை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் திடீரென இறந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தாயான 36 வயதுடைய சுப்பிரமணியம் காஞ்சனா என்பவரே இவ்வாறு நேற்று காலை உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

15

## தொற்றிலிருந்து குணமடையும் வரை தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டாம்

### சுகாதார அமைச்சு அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 13

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் தொற்றிலிருந்து முழுமையாக குணமடையும் முன்னர் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள வேண்டாம் என சுகாதாரப் பிரிவினர் மக்களை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

சிலர் கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டவுடன் தடுப்பூசி பெற்றுக்கொள்ள முனைகின்றனர் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டினார்.

15

## ஜி.எஸ்.பி. வரி சலுகையை இழக்கும் அபாயம் இல்லை

### சொல்கிறார் அமைச்சர் தினேஷ்



கொழும்பு, ஜூலை 13

இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகையை இழக்கும் அபாயம் இல்லை என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு கிராமத்தில் விவசாயி ஒருவர் எப்போதும் தனது வயலில் நல்ல விளைச்சல் செய்து காட்டுவார். இதனால் அவர் மிகப் பிரபல்யமானவராக இருந்தார்.

அந்த விவசாயியை ஒருநாள் ஒரு பத்திரிகையாளர் பேட்டி எடுக்க வந்திருந்தார்.

"உங்கள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் நேர்மையானவர்கள்தானா?" என்று கேட்டார் பத்திரிகையாளர்.

"அதில் என்ன சந்தேகம்? எல்லோரும் நேர்மையான வர்கள்தான்" என்று பதில் சொன்னார் விவசாயி.

"அப்படியானால் உங்கள் கையில் ஏன் எப்போதும் துப்பாக்கி வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார் பத்திரிகையாளர்.

"எல்லோரும் நேர்மையாக இருப்பதற்குத்தான்", என்று உடனே பதில் சொன்னார் விவசாயி.

சேதன பசளையைப் பயன்படுத்துவதற்காக அரசாங்கம் திடீரென்று இரசாயன உரங்களின் இறக்கு மதிக்கு தடை விதித்தது. இரசாயன உரங்களைப் பாவிப்பதால்தான் மக்கள் விதம் விதமான - புதிய புதிய நோய்களுக்கு ஆளாகின்றனர் என்பதில் மாற்றுக் கருத்து இருக்காது.

சிறுநீரக நோய் பரவும் அனர்த்தத்தைக் கொண்ட பதினொரு மாவட்டங்களில் (அநுராதபுரம், பொலநறுவை, மாத்தளை, திருகோணமலை, அம்பாறை, வவுனியா, குருணாகல் , முல்லைத்தீவு, பதுளை, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை) குறைந்த வருமானத்தைக் கொண்ட 25 ஆயிரத்து 320 சிறுநீரக நோயாளிகள் இருக்கின்றனர் என்று கணக் கிடப்பட்டுள்ளது.

சிறுநீரக பாதிப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணி களில் ஒன்று இந்த இராசாயன உர பாவனை என்கின் றன ஆய்வுகள்.

இரசாயன உரத்திற்குப் பதிலாக இயற்கை உரங் களைப் பயன்படுத்துவது சிறந்ததுதான். ஆனால், அதனைத் தடை செய்வதற்கு முன்னர், இயற்கை பசளை உற்பத்தியை ஆரம்பிக்க மக்களுக்கு ஊக்க மளிக்கவேண்டும். அரசாங்கம் அதற்கான உதவிகளை வழங்கவேண்டும். இயற்கை உர உற்பத்தியில் நமது தேவைக்கு போதுமானதாக உற்பத்தித்திறனை அடைந்த பின்னரே இவ்வாறு தடை விதித்திருக்கலாம் என்று இந்த ஊர்க்குருவி யோசித்ததுண்டு.

நேற்றைய தினம் யாழ்ப்பாண கிராமம் ஒன்றின் கமக்காரர் சங்கத்தின் தலைவர் ஒருவரைச் சந்திக்க முடிந்தது. அவர் இதுபற்றி கேட்க முதலே சொன் னார், "நான் எனக்கு தேவையான உரத்தை போதுமான ளவு வாங்கி வைத்துவிட்டடேன்...", என்று.

"ஏன், இந்த இராசயன உரங்களால் மக்களுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்கு இலவச மருத்துவ சிகிகச்சைக்கே நாடு எவ்வளவு செலவு செய்யவேண்டி யிருக்கின்றது. நீங்கள் இயற்கை உரத்தை பாவிக்கலாம் தானே?", என்று கேட்டேன்.

அதற்கு அவர் சொன்னார், வயலை குத்தகைக்கு எடுத்து இயற்கை உரத்தைப் போட்டு நெல் விதைத் தால் குத்தகைக் காசுக்குத்தான் நெல் விளைச்சல் போதுமானதாக இருக்கும் என்று.

"அப்ப மக்களுக்கு நஞ்சைக் குடுத்தாலும் பரவா யில்லை நீங்கள் இலாபம் அடைஞ்சால் போதுமோ? நீங்களும் அதைத்தானே சாப்பிடப்போறீங்கள்", என்றேன்.

அதற்கு அவர் சொன்னார், "இல்லை எங்கட தேவைக்கு ஒரு வருசத்திற்கு தேவையான நெல்லை இயற்கை உரத்தைப் போட்டு தனியாக வயலில் விதைப்பேன்.." என்றார்.

கிராமத்தவர்கள் எல்லோரும் நேர்மையாக இருக்க வேண்டும் என்றால் துப்பாக்கி வைத்திருக்க வேண்டும் என்று மேலே சொன்ன கதையில் வந்த விவசாயிதான் ஞாபகத்தில் வந்துபோனார்.

அந்த விவசாயி துப்பாக்கி வைத்திருப்பதுபோல அரசாங்கமும் இரசாயன உரத்தைத் தடைசெய்தது சரிதானோ என்று எண்ணத்தோன்றியது.

- ஊர்க்குருவி

# அத்தியாவசிய சேவையினருக்காக நாளை முதல் பஸ், ரயில் சேவைகள்!

கொழும்பு, ஜுலை 13

நாளை புதன்கிழமை முதல் நடை முறைக்கு வரும் வகையில் அத்தியா வசிய சேவை கடமைகளில் ஈடுபடு வோருக்காக மாகாணங்களுக்கு இடையேயான பேருந்துகள் மற்றும் தொடருந்து சேவைகள் நடத்தப் படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலம் அமு னுகம தெரிவித்துள்ளார்.

பேருந்துகள் மற்றும் தொடருந்து களின் சேவைகளைப் பெற விரும்பும் அத்தியாவசிய சேவை உத்தியோ கத்தர்கள் தங்கள் கடமை அடையாள அட்டை அல்லது கடமை உறுதிப் படுத்தல் கடிதத்தை வைத்திருப்பது கட்டாயமாகும்.

அதே நேரத்தில், அத்தியாவசிய தனிப்பட்ட விடயங்களுக்காக பல் வேறு நிறுவனங்களுக்கு செல்ல விரும்புவோர் இந்த மாகாணங் களுக்கு இடையேயான பேருந்துகள் மற்றும் தொடருந்துகளைப் பயன் படுத்துவதன் மூலமும் தங்கள் தேவைகளை நிறைவு செய்ய முடியும். அவர்களும் தங்கள் தேவையை உறுதிப்படுத்தும் ஆவணத்தை தங்கள் வசம் வைத்திருக்க வேண்டும்.

நேற்று கண்டியில் நடை பெற்ற தடுப்பூசி நிகழ்ச்சியில் பங்கேற்றபோது திலும் அமு னுகம இதனை தெரிவித்தார். (ஐ)

## இணையவழியில் திருவாசக விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யின் வருடாந்த திருவாசக விழா மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு பூசைத் தினமான இன்று செவ்வாய்க் கிழமை இரவு எட்டு மணிக்கு "சூம்" இணைய வழியில் நடைபெறவுள் ளது.

கலாசாலை அதிபர் வீ. கருணலிங் கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அகில இலங்கை இந் துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி கு.வை.கா. வைத்தீஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

தமிழகத்தின் பிரபல ஆன்மீகச் சொற்பொழிவாளர் பேராசிரியர் வே.சங்கரநாராயணன் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்துசமய பாடத்தைச் சிறப்பு நெறியாகக் கற்கும் ஆசிரிய மாணவர் கள் பங்கேற்கும் "திருவாசகத் தேன் துளிகள்" என்ற தொனிப்பொருளில் அமைந்த கருத்தரங்கும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு. பரமானந்தம் மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை இந்துமன்றக் காப்பாளர் ஜானகி தர்மஜீலன் ஆகி யோர் வாழ்த்துரைகளையும் கலா சாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தொடக்கவுரையையும் உபஅதிபர் த. கோபாலகிருஸ்ணன் கருத்துரை யையும் வழங்குவர்.

நிகழ்வில் பங்கேற்க விரும்புப வர்கள், 5847908072 என்ற சூம் எண் மூலம், KTC என்ற கடவுச்சொல் லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ள முடியும். (ஐ)

## முல்லைத்தீவுக்கு கல்வி பணிப்பாளர்

வடமராட்சி, ஜுலை 12

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக இரத்தினம் தமிழ் மாறன் வட மாகாணக் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர், வடமராட்சி வல யத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியிருந் தார்.

முல்லைத்தீவு வலயத்திற்கு நிரந் தர கல்விப் பணிப்பாளர் இன்மை யால் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளராக புதிய நியமனம்வரை பதில் கடமையாற்றி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

கல்வி tv CHANNEL-1

**13.07.2021**

**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

**13.07.2021**

**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
13.07.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆனி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# ஜனநாயக ரீதியான போராட்டங்கள்

இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகளைத் தடுத்து வைத்திருக்கும் விவகாரம் இலங்கை அரசியலில் பேசுபொருளாகியிருக்கின்றது. சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறி கொழும்பில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள் என்னும் அடிப்படையில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கேப்பாபிலவு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின், இலங்கைக்கான வதிவிட பிரதி, அமைதியான முறையில் ஆர்பாட்டங்களை நடத்தும் மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார். கொரோனா என்னும் பெயரில் அரசாங்கம் அடக்குமுறைகளை கட்டவிழத்துவிட்டுள்ளதாக எதிர்தரப்பினர் குற்றம் சாட்டியிருக்கின்றனர். நாட்டை நெருக்கடியிலிருந்து தூக்கி நிறுத்தும் கோஷத்துடன் பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சை பொறுப்பேற்றிருக்கின்ற சூழலில்தான், அரசாங்கம் மீண்டும் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கின்றது.

ஜோன் கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிராக, அமைதிப் போராட்டங்களில் ஈடுபட்ட போதே, மேற்படி ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கட்டாய தனிமைப்படுத்தலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த விடயம் சில கேள்விகளை எழுப்பியிருக்கின்றது. ஏனெனில், இதற்கு முன்னரும் கொழும்பில் சில ஆர்பாட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாகக் கொரோனா பெருந்தொற்று காலத்தில்தான் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்திய நிறுவனத்திற்கு வழங்க வேண்டாம் என்னும் அடிப்படையில், துறைமுக ஊழியர் தொழிற்சங்கங்கள் தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன.

அப்போது இவ்வாறான கடுமையான நடவடிக்கை எதனையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கவில்லை. அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதன் மூலமே அந்த ஆர்பாட்ட நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவந்தது. இறுதியில் கிழக்கு கொள்கலன் முனையம் இந்தியாவிற்கு வழங்கப்படுவதில்லை என்னும் முடிவை அரசாங்கம் அறிவித்தது. பொதுஜன பெரமுனவை ஆட்சிக்கு கொண்டு வந்ததில் துறைமுக ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும் பங்கிருக்கின்றது. அவர்களை அரசாங்கத்தினால் பகைக்க முடியாது என்றும் அப்போது கூறப்பட்டது. அவ்வாறாயின் பொதுஜன பெரமுனவை ஆதரிக்காதவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அரசாங்கத்தின் அணுகுமுறை இப்படித்தான் அமையுமா? அல்லது இது போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவர்களுக்கு அரசாங்கம் எச்சரிக்கையை வழங்க முற்படுகின்றதா?

ஜனநாயக சூழலில் இது போன்ற அமைதியான ஆர்பாட்டங்கள் இடம் பெறுவது சாதாரணமான ஒன்று. ஒரு நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றதா என்பதை இது போன்ற செயல்பாடுகளின் மூலமாகவே அளவிட முடியும். மேற்கு நாடுகளில், குறிப்பாக அமெரிக்காவில் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு மத்தியில்தான், கறுப்பின மக்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். மேற்கு நாடுகள் பலவற்றில் அவ்வாறான ஜனநாயக செயல்பாடுகள் கொரோனா காலத்தில் இடம்பெற்றிருந்தன. அங்கு எவரும் இவ்வாறு கட்டாய தனிமைப்படுத்தல் மூலம் தடுத்து வைக்கப்படவில்லை.

இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இவ்வாறு தனிமைப்படுத்தல் என்னும் பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதானது, ஜனநாயக ரீதியான செயல்பாடுகளில் ஈடுபடுவர்களை மறைமுகமாக அச்சுறுத்தும் செயலாகும். அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக இருந்த பௌத்த பிக்குகள் சிலரே இதனை சுட்டிக்காட்டிருக்கின்றனர். இதுபோன்ற செயல்பாடுகளால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தால் எத்தனை பஸில்கள் வந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து மீளப் போவதில்லை.

# தனிமைப்படுத்தப்படும் நிலையில் அரசு!

**- அலசுவது இராஜதந்திரி -**

அண்மையில் கோட்டை - ஸ்ரீஜெயவர்த்தனபுர பாராளுமன்ற கட்டடத்துக்கருகில், அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உட்பட அவரோடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிலர் கைதுசெய்யப்பட்டு கோவிட்-19 தடுப்பு வழிமுறைகளை மீறினரென முல்லைத்தீவு கேப்பாபிலவிலுள்ள தடுப்பு முகாமில் தனிமைப்படுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்படல் நிலையங்கள் கோவிட்-19 நோய் அறிகுறி தென்பட்டவர்களுக்கெனவும் வெளிநாடுகளிலிருந்து வருவோர் ஒரு குறிப்பிட்ட காலம் தனிமைப்படுத்தப்படும் விதத்திலுமே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், கோவிட்-19 தனிமைப்படுத்தல் நிலையங்கள் தற்போது அரசுக்கு எதிரானவர்களை பழிவாங்கும் விதத்தில் ஏற்படுத்தப்பட்ட தடுப்பு முகாம்களாக மாறிவிட்டனவோ என்று கருதப்படுமளவுக்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டோரும் கைது செய்யப்பட்டு இந்த தனிமைப்படுத்தல் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர், கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களில் தடுத்து வைக்கப்படுவது சட்ட விரோதமானது என்று இலங்கை சட்டத் தரணிகள் சங்கமும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

**இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கோரிக்கை**

அத்துடன் பொலிஸ் மா அதிபரிடம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை கைது செய்து தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு கொண்டு செல்ல வேண்டாமெனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அறிக்கையில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் சுகாதார நடைமுறைகள் சார்ந்தவையே தவிர எவ்வகையிலும் தண்டனைக்குரிய தடுப்பு முகாம்களோ அல்லது சிறைக்கூடங்களோ அல்ல எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட அறிக்கையை நோக்கும்போது தற்போதைய கோவிட்-19 வியாதியை கட்டுப்படுத்தும் விதத்தில் ஏற்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையங்கள் அரசாட்சியில் உள்ளோரின் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கின்றது. அரசாங்கம் இவ்வாறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரை தனிமைப்படுத்தல் நிலையங்களில் தடுத்து வைத்து அவர்களது ஜனநாயக ரீதியான உரிமைகளுக்கு சவால் விடுகின்றது.

**பங்காளிகள் அதிருப்தி**

மறுபுறத்தே அரசாங்கத்துக்குள் தற்போது படிப்படியாக ஏற்பட ஆரம்பித்திருக்கும் குழப்ப நிலை வெகு விரைவில் அரசாங்கத்தில் அங்கம் பெறுகின்ற பங்காளிக் கட்சிகளையும் அரசிலிருந்து விலக வைத்து ஆட்சி அதிகாரங்களில் இருப்போரை தனிமைப்படுத்தி விடுமோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.

அரசாங்கத்துக்குள் ஒரு குழப்பகரமான சூழல் நிலவுவதை இதுவரை காலமும் அரசின்



"பிரசார பீரங்கி" என்று வர்ணிக்கப்பட்ட அமைச்சர் விமல் வீரவன்ச சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ள கருத்து அரச தரப்பில் அதிருப்தியாளர்களிருப்பதை மேலும் உறுதிசெய்வதாக இருக்கின்றது. இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அரசிலிருந்து கொண்டு போராடுவோர் அரசிலிருந்து வெளியேற வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

**மூழ்கும் கப்பல்**

அண்மையில் நிதி அமைச்சராகப் பதவியேற்ற, ஜனாதிபதி, பிரதமர், ஆகியோரின் சகோதரரான பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசம் குறித்தும் அமைச்சர் விமல் வீரவன்ச தனது அதிருப்தியை வெளியிடுகையில் இரட்டை பிரஜா உரிமை கொண்டிருப்போர் பாராளுமன்றம் வரக்கூடாதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவை தவிர, அரசாங்கத்தில் இருக்கின்ற பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் அண்மையில் தமது அரசின் மீதான விமர்சனங்களை மிக அதிருப்தியான முறையில் வெளியிட்டிருந்தனர்.

ஆளுங்கட்சியில் பிரதான பங்காளிக்கட்சியாக இருக்கின்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அரசாங்கத்தை நீரில் மூழ்கிக்கொண்டிருக்கின்ற ஒரு கப்பலாக கருதுவதாக குறிப்பிட்டுள்ளார். அத்துடன், மூழ்க ஆரம்பித்திருக்கும் கப்பலில் தொடர்ந்து பயணிக்க முடியாது என்று சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களில் அநேகர் கருதுகின்றனரெனவும் அந்தக் கட்சியின் செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதுதவிர ஜனாதிபதிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே பேச்சு ஒன்றை நடத்துவதற்கு உத்தேசித்துள்ள போதிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருக்கும் அநேகர் ஜனாதிபதியுடனான பேச்சு அரத்தமற்ற தொன்றாகவே இருக்கும் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஒருபுறம் பௌத்த மகா சங்கத்தினர் ஆட்சியாளரை கண்டிக்க ஆரம்பித்துள்ளனர். அத்துடன், அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்களை பங்காளிக் கட்சிகளும் வெளியிட்டு வருகின்ற நிலையில் அரசாங்க தரப்பினர் ஆட்சிபீடத்தில் தனிமைப்படுத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 13 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - ஆனி 29
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.வேலைச் சுமை அதிகரிக்கும். மனச்சோர்வு நீங்கும். அனுபவ அறிவை பயன்படுத்தி வெல்வீர்கள். பிறரிடம் கைமாற்று வாங்கி நிலைமையை சமாளிப்பீர்கள்.

**இடபம்**
தடைப்பட்டு வந்த விஷயங்கள் முடிந்து நிம்மதி வரும். யாரையும் பகைத்து கொள்ளாதீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி வரும். முன்னதாக யோசித்து செயல்படுவீர்கள். அமைதியான நாள்.

**மிதுனம்**
கவலைகள் குறுக்கிட்டால் வந்த வேகத்தில் காணாமல் போகும். பணியாளர்கள் குழப்பம் தீர்ந்து தெளிவான முடிவை எட்டுவீர்கள். எதிர்பார்த்த பணம் வருவதில் இருந்த தாமதம் நீங்கும்.

**கடகம்**
சிறுசிறு தேவைகள் நிறைவேறும். தாமதித்த விஷயம் முடியும். யாருடனும் விரோதம் ஏற்படாமல் விழிப்புடன் பேசுங்கள் பழகுங்கள். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள். கவலை பறந்தோடும்.

**சிம்மம்**
பெரிய மனிதர்களின் அறிமுகத்தால் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். வியாபாரத்தில் இருந்த நெருக்கடி தீரும். முதியோருக்குப் பொன்னாள். எதிர்பார்த்த உயர்வுகளை அடைய பொறுமையுடன் காத்திருங்கள்.

**கன்னி**
எதிர்பாராத விஷயம் நடக்கும். எதையும் யோசித்துச் செய்வீர்கள். திருப்திகரமான நாள். உடன் பணி செய்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தினர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். வெற்றி.

**துலாம்**
கடினமாக உழைத்து வெற்றி இலக்கை எட்டுவீர்கள். நினைத்ததை முடித்து மகிழ்ச்சி காண்பீர்கள். திடீர் செலவு ஏற்படும். வருமானம் ஓரளவு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்**
கவலைகள் தீரும். மற்றவர்களிடம் சுமுகமாகப் பழகுவீர்கள். குழந்தைகளின் முன்னேற்றத்தால் மனநிம்மதி உண்டாகும். உழைப்பு வீண் போகாது. கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி வெல்வீர்கள்.

**தனுசு**
உங்களை அறியாமலேயே நற்செயல்களில் ஈடுபாடு கொள்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். கவனமாக இருக்க வேண்டிய நாள். வீண் பயங்களை உதறுங்கள்.

**மகரம்**
பணியாளர்கள் மிகுந்த அக்கறையுடன் பணிபுரிவது நல்லது. அளிக்கப்பட்ட பணியைப் பொறுப்புடன் நிறைவேற்றுவீர்கள் முயற்சியை முடுக்கிவிட்டு முன்னேறும் நாள். நன்மை சேரும்.

**கும்பம்**
வருமானம் பற்றிய கவலையோ வருத்தமோ வேண்டாம். குடும்பத்தை பற்றிய கவலை பறந்தோடும். உடல்நலனில் அக்கறை கூடும். சக பணி யாளர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.

**மீனம்**
நீங்கள் எடுத்த அதிரடி முடிவுகள் உங்களுக்குச் சாதகமாகும். மனம் நிறையும் நாள். போராடி வெல்வீர்கள். இயந்திரங்களை கவனமாக இயக்குங்கள். நேரமின்றி உழைப்பீர்கள்.

# ரஜனி மக்கள் மன்றம் கலைப்பு; ரசிகர் நற்பணி மன்றம் தொடரும்

## ரஜினிகாந்த் நேற்று அறிவிப்பு

சென்னை, ஜூலை 13

திரைப்பட நடிகர் ரஜினிகாந்த், தாம் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என்ற முந்தைய நிலைப்பாட்டை மீண்டும் நேற்று உறுதிப்படுத்தியிருக்கிறார். அத்துடன் ரஜினி மக்கள் மன்றம் கலைக்கப்படுவதாகவும் அவர் அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், “நான் அரசியல் கட்சி ஆரம்பித்து அரசியலில் ஈடுபட, ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றத்தை ரஜினி மக்கள் மன்றமாக மாற்றி, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பல பதவிகளையும் பல சார்பு அணிகளையும் உருவாக்கினோம். காலசூழலால்நாம்நினைத்தது சாத்தியப்படவில்லை. வருங்காலத்தில் அரசியலில் ஈடுபடப்போகும் எண்ணம் எனக்கில்லை.



ஆகையால், ரஜினி மக்கள் மன்றத்தை கலைத்து விட்டு, சார்பு அணிகள் எதுவுமின்றி, இப்போதைக்கு ரஜினி மக்கள் மன்றத்தில் உள்ள செயலாளர்கள், இணை, துணை செயலாளர்கள் மற்றும் செயல்குழு உறுப்பினர்களுடன் மக்கள் நலப்பணிக்காக, முன்பு போல ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றமாக செயல்படும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் நேற்று காலை பேசிய ரஜினிகாந்த், உடல் நல பிரச்னைகள் காரணமாக அமெரிக்காவுக்கு சிகிச்சைக்காக சென்று திரும்பினாரென வும், கொரோனா கால சூழல்கள் காரணமாக பொதுவெளியில் அனைவரையும் சந்திப்பதை தவிர்த்தாரென கூறினார். இதைத் தொடர்ந்து அடுத்த சில நிமிடங்களில் நிர்வாகிகளுடன் பேசிய ரஜினிகாந்த், தமது அரசியல் நிலைப்பாடு மற்றும் மக்கள் மன்றம் தொடர்பான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார்.

# மேகதாது விவகாரத்தில் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு

## ஸ்டாலின் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு

சென்னை, ஜூலை 13

கர்நாடக அரசு கட்டும் மேகதாது அணை விவகாரம் தொடர்பில் தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளிப்பது என்பன உள்ளிட்ட 3 தீர்மானங்கள் சென்னையில் தமிழக முதலமைச்சரால் நேற்று கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் கர்நாடக அரசின் அணைக்கட்டும் முயற்சிக்கு கண்டனம், தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளிப்பது, இது குறித்து பிரதமர்நரேந்திர மோடியை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசுவது ஆகிய 3 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் அணை கட்டுவதற்குக் கர்நாடக அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகள் தொடர்பாக, சட்டபூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழக முதல்வர், பிரதமரை நேரில் சந்தித்து மேகதாது அணை பிரச்னை குறித்துத் தமிழ்நாட்டின் நிலைபாட்டை விளக்கி, நமது மாநில விவசாயிகளின் நலன் காக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.



மேகதாது அணை அமைக்க தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது எனக் கோரி கர்நாடக முதல்வர்எடியூரப்பா தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதியபோது, இந்த அணை கட்டுவதால், தமிழக விவசாயிகளின் நலன் பாதிக்கப்படும் என்றும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு இது எதிராக அமையும் என்றும் திட்டவட்டமாக விளக்கி, இந்த அணை அமைந்திட தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது என உறுதிபடத் தெரிவித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் கர்நாடக முதல்வருக்கு பதில் கடிதம் எழுதினார்.

இந்தச் சூழ்நிலையில், விவசாயிகளின் நலனைக் காப்பதில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினரின் ஒருமித்த எண்ணங்களைப் பிரதிபலிக்கும் வகையில், மேகதாது அணை பிரச்சினை குறித்து கலந்தாலோசிக்க, தமிழகத்திலுள்ள அனைத்துச் சட்ட மன்றக் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் தமிழக முதல்வர் தலைமையில், நேற்று காலை 10.30 மணியளவில், தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.

# கொங்கு நாடு என பிரிவினை வந்தால் தமிழ்நாட்டில் அமைதியை பாதிக்கும்

## அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 13

கொங்கு நாடு என பிரிவினை வந்தால் தமிழ்நாட்டில் அமைதி பாதிக்கும் என்று அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனு சாமி கூறினார்.

இதுகுறித்து கிருஷ்ணகிரியில் அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் கேபி.முனுசாமி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: -

பேரறிஞர் அண்ணா அரசியல் கட்சியை உருவாக்கிய போது திராவிட நாடு திராவிடர்க்கே என்ற கொள்கையுடன் இயங்கி வந்தார். நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் அவர் வைத்திருக்கும் பற்றால், அப்படிபட்ட கொள்கையை கைவிட்டார்.

அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகிய தலைவர்கள் தமிழ்நாடு பிரிவதை விரும்பவில்லை. கன்னியாகுமரி முதல் சென்னை வரையில் தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் தமிழ்நாடு, தமிழர்கள் என்கிற உணர்வுடன் உள்ளனர். கொங்கு நாடு என்கிற பிரிவினை விதையை விதைக்கவேண்டாம். அப்படி ஒருவேளை கொங்கு நாடு என பிரிவினை வந்தால் தமிழ்நாட்டில் அமைதி பாதிக்கும்.

இந்தியாவில் மாநிலங்களுக்கு இடையே பிரச்னைகள் ஏற்படும் பொழுது, மத்திய அரசு நடுநிலைமையோடு செயல்பட்டு உச்சநீதிமன்றம் சென்றால் என்ன தீர்ப்பு வழங்குவார்களோ அதை உணர்ந்து நடுநிலையோடு செயல்பட வேண்டும்” என்று அவர் கூறினார்.

# சர்வதேச நாணய நிதியம் ஊடாக 800 மில்லியன் டொலர் நிதியுதவி

## அஜித் நிவாட் கப்ரால் தகவல்



கொழும்பு, ஜூலை 13

**நாட்டின் பொருளாதார இயலுமையை வலுப்படுத்திக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக 800 மில்லியன் அமெரிக்க டொலர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கிடைக்கப் பெறவுள்ளதாக நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பூகோள மட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக தாக்கத்தை கருத்திற் கொண்டு சர்வதேச நாணய நிதியம் தனது உறுப்பு நாடுகளுக்கு 650 பில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடை அடிப்படையில் வழங்க தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் இலங்கைக்கும் அந்த நிவாரண நிதி கிடைக்கப்பெறவுள்ளது.

உலக பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள வேளையில் சர்வதேச நாணய நிதியம் தனது உறுப்பு நாடுகளுக்கு இவ்வாறு நிவாரண அடிப்படையில் நிதி வழங்குவது வழமையானது. இதனடிப்படையில் 510 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நிதியை நாட்டின் பொருளாதார இயலுமையை மேம்படுத்துவதற்காகவும், தற்போதைய நெருக்கடி நிலையினை வெற்றிக் கொள்வதற்காகவும் பயன்படுத்திக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த மாதத்தில் இருந்து நேற்று முன்தினம் வரை சர்வதேச சந்தையில் ஓர் எரிபொருள் தாங்கியின் விலை 10 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் எரிபொருளின் விலையை குறைப்பதென்பது சிக்கலானது.

தேசிய பொருளாதாரத்தில் இயலுமையை மேம்படுத்தும் நோக்கில் எரிபொருளின் விலை கடந்த மாதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்ட காலத்திலும் கடந்த 21 மாத காலமாக எரிபொருளின் விலை அதிகரிக்கப்படவில்லை. நெருக்கடியான சூழ்நிலையிலும் நாட்டு மக்களுக்கு எரிபொருள் விலை குறைப்பின் ஊடாக நிவாரணம் வழங்கப்பட்டது - என்றார்.

# தடுப்பூசி ஏற்றுவதற்கு முற்பதிவு செய்யலாம்

கொழும்பு, ஜூலை 13

மேல்மாகாணத்தில் உள்ள அனைவருக்கும் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்காக இணையவழி ஊடாக கால நேரங்களை முற்பதிவு செய்துகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உங்களுக்கு ஒதுக்கப்பட்ட கால நேரத்தில் கொரோனா தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள முடியுமெனவும், பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

Https://vaccine.covid19.gov.lk என்ற இணையதளம் வழியாக பொதுமக்கள் தடுப்பூசி பெற வசதியான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ள லாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சியுடன் இணைய சுதந்திர கட்சி தயாரில்லை

## அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 13

பிரச்சனைகள் இருப்பினும் அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ள சுதந்திர கட்சி தயாராக இல்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கீழ் மட்டத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பில் பொதுஜன பெரமுன கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி தீர்மானத்துக்கு வர உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, சிக்கல்களுக்கு மத்தியில் சுதந்திர கட்சியின் அமைச்சர்களுக்கு நேரடியாக தீர்மானம் எடுக்க முடியாமல் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி அலவத்துவல தெரிவித்துள்ளார்.

# அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக பஸ் நிலைய கூரையில் ஏறி போராட்டம்!



கொழும்பு, ஜூலை 13

விவசாயிகளின் பிரச்சனைகள் குறித்து பேசும் தலைவர்களின் மீதான அடக்குமுறை மற்றும் மக்கள் பிரச்சனைகளை வெளிப்படுத்தும் ஊடக நிறுவனங்களின் மீதான அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக அநுராதபுரம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அனுர பண்டார நேற்றுக் காலை மகாவிலாச்சிய பஸ் நிலைய கூரையில் ஏறி போராட்டம் நடத்தினார்.

கறுப்பு துண்டொன்றை அணிந்தபடி மகாவிலாச்சிய பஸ் நிலையத்தின் கூரை மீது ஏறி விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு உடனடியாக தீர்வு காணக் கோரி அவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அவர் முன்னர் சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இரண்டையும் பிரதிநிதித்துவப்படுத்தியவராவார்.

# சிவன் கோவிலில் வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 13

சித்தன்கேணி சிவன் ஆலய முன்றலில் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வட்டுக்கோட்டை - சித்தன்கேணி சிவன் ஆலய வளாகத்தில் நேற்று முன் தினம் ஆலய நிர்வாகத்தில் உள்ள ஒருவருக்கும் வேறு ஒருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்த வேறு ஒரு நபர் கோவிலின் நிர்வாகத்தில் உள்ள ஒருவரை வாளால் வெட்டியுள்ளார். இதனைத் தொடர்ந்து அவரது வாள் கீழே விழுந்ததையடுத்து அந்த வாள் மீட்கப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வாள் வெட்டினை மேற்கொண்டவர் திருநெல்வேலியை சேர்ந்தவர் எனவும் கோவில் தகராறு காரணமாகவே வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

# ஆசிரியர்களை அரசு அவமதித்துள்ளது!

## ஒன்றிணைந்த ஆசிரியர் சேவை சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

ஆசிரியர் ஒருவரை மாத்திரம் பயன்படுத்தி இணையவழிக்கல்விச் செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவினால் வெளியிடப்பட்ட கருத்து, ஆசிரியர்கள் தொடர்பில் ஒட்டுமொத்த அரசாங்கமும் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

இது நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர் சமூகத்தை அவமதிக்கும் வகையிலான கருத்தாகும். இதனை அரசாங்கம் உடனடியாகத் திருத்திக்கொள்ளும் அதேவேளை, ஆசிரியர் சமூகத்திடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்று ஒன்றிணைந்த ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ பண்டார வலியுறுத்தினார்.

மேலும் வெளிநாட்டிலிருந்து அதிசொகுசு வாகனங்களைத் தருவித்துக் கொள்வதில் காண்பித்த அக்கறையை, மாணவர்களுக்குரிய கல்வியை இடையூறுகளின்றிப் பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் காண்பிக்கவில்லை. குறைந்தபட்சம் இணையவசதியைக்கூடப் பெற்றுக்கொடுக்காத அரசாங்கத்தினாலேயே தற்போது மேற்குறிப்பிட்டவாறான பொறுப்பற்ற கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து பல்லேகல இராணுவ தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து அவரால் வெளியிடப்பட்டிருக்கும் காணொளியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசாங்கத்துக்கு எதிரான அதிபர் மற்றும் ஆசிரியர்களின் போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். எமது கோரிக்கைகளுக்குரிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால், இந்தப் போராட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுத் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதனை நிறுத்தமுடியாது. எனினும் இவையனைத்திலிருந்தும் அரசாங்கம் இன்னமும் பாடங்கற்றுக் கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது.

ஆகையினால்தான் இணையவழியில் (ஒன்லைன்) கற்பிப்பதற்கு ஓர் ஆசிரியர் இருந்தால் மாத்திரம் போதுமானது என்று கூறுகின்றார்கள். இந்தக் கருத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவினால் கூறப்பட்டாலும், இதுவே ஆசிரியர்கள் தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடாக இருக்கின்றது.

எனவே இந்தக் கருத்தானது நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர்களை அவமதிக்கும் செயலாகும். இதனை அரசாங்கம் உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்ததாக இணையவழி மூலமான கற்பித்தல் நடவடிக்கையை ஆசிரியர்கள் அவர்களின் சுயவிருப்பின் அடிப்படையிலேயே முன்னெடுத்து வருகின்றார்கள். மாறாக அரசாங்கம் இதற்குரிய வசதிகள் எதனையும் வழங்கவில்லை.

இணையவழிக்கல்விச் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக்கொடுக்குமாறு ஆசிரியர்களும் ஆசிரியர் சங்கங்களும் கோரிக்கைகளை முன்வைத்தபோதிலும், அதற்குரிய எந்தவொரு நடவடிக்கைகளும் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்படவில்லை.

வெளிநாட்டிலிருந்து அதிசொகுசு வாகனங்களைத் தருவித்துக்கொள்வதில் காண்பித்த அக்கறையை, மாணவர்களுக்குரிய கல்விச்செயல்பாடுகளை இடையூறுகளின்றிப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசாங்கம் காண்பிக்கவில்லை. குறைந்தபட்சம் இணையவசதியைக்கூடப் பெற்றுக் கொடுக்கவில்லை. அத்தகைய அரசாங்கத்தினாலேயே தற்போது மேற்குறிப்பிட்டவாறான பொறுப்பற்ற கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

தமக்கு வழங்கப்படும் மிகச்சொற்ப ஊதியத்தைப் பயன்படுத்தி, பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் மாணவர்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து, சுயவிருப்பின் அடிப்படையில் இணையவழிக்கல்வியை முன்னெடுத்துவரும் ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தையும் இந்த அரசாங்கம் அவமதித்துள்ளது. ஆகவே இதுவிடயத்தில் அரசாங்கமானது உடனடியாக ஆசிரியர்களிடம் மன்னிப்புக்கோரவேண்டும் - என்று கூறியுள்ளார்.

# பாடசாலைகளை ஓகஸ்டில் திறப்பதற்கு அரசு நடவடிக்கை

## கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

**ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்திய பின்னர் பாடசாலைகளைத் திறப்பதற்கு ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

நேற்று திங்கட்கிழமை பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு பிராந்தியத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்றும் (நேற்று) நாளையும் (இன்று) தடுப்பூசி போடப்படும் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டில் 2 இலட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர் என்றும் அவர்களில் பெரும்பாலோருக்கு ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் முன்னெடுத்த போராட்டத்தில் இடம்பெற்ற கைது நடவடிக்கை காரணமாக ஒன்லைன் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து அவர்கள் விலகியுள்ளனரே என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், சில ஆசிரியர்கள் மட்டுமே இன்று கற்பித்தலிலிருந்து விலக நடவடிக்கை எடுத்துள்ளனர். இருப்பினும், ஒன்லைன் கல்வியைத் தொடர வேண்டும் என்றாலும் அது நிரந்தர தீர்வு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

## சிலாபம் நகரசபை தலைவர் கைது!

கொழும்பு, ஜூலை 13

சிலாபம் நகர சபை தலைவர் கைது செய்யப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

நகரசபை தலைவரும் மற்றொருவரும் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இரண்டு இளைஞர்களை தாக்கி காயப்படுத்தினரென பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட இரண்டு இளைஞர்களும் சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 33 கைதிகளுக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 13

பூசா சிறைச்சாலையில் உள்ள மேலும் 33 கைதிகள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பூசா சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கே கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

அவர்கள் சிகிச்சைக்காக மாத்தறை, வதரேக மற்றும் அங்குனகொலபெலெச சிறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## சீரற்ற வானிலை காரணமாக 13ஆயிரத்து 519 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற வானிலையால் 7 மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 432 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காரணமாக கடந்த சில நாட்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், அதிக மழையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 3 ஆயிரத்து 432 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 519 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

அவர்களில் 59 குடும்பங்களைச் சேர்ந்த 265 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

---

## சுழிபுரத்தில் பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு

### இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணம் - சுழிபுரத்திலுள்ள கசிப்பு உற்பத்தி செய்யும் பகுதியை முற்றுகையிடச் சென்ற பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



வட்டுக்கோட்டை - சுழிபுரம், வறுத்தோலை பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அப்பகுதியிலுள்ள வீட்டுக்கு சென்ற பொலிஸாருக்கும் அங்கிருந்த பெண்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது அருகிலுள்ள வீட்டில் வசிக்கும் இளைஞன் ஒருவரும் சம்பவ இடத்துக்கு வந்தபோது, வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெண்கள், அந்த இளைஞன்தான் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளாரெனக் கூறி, பொலிஸாருக்கு முன்னாலேயே அந்த இளைஞனை கொட்டனால் தாக்கினர்.

இந்த சம்பவத்தால் காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேலும் சம்பவத்துக்கு காரணமான பெண்களை பொலிஸார் கைது செய்ய முற்பட்டவேளை, அவர்களின் உறவினரான ஆண் ஒருவர், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

இதனால் குறித்த ஆணையும் இளைஞனை தாக்கிய பெண்ணையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் அந்த பெண்ணின் வீட்டில் இருந்து 40 லீற்றர் கோடாவும் ஒரு லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---




## யாழில் கொரோனா விழிப்புணர்வு செயல்பாட்டில் சர்வமத பேரவை

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாணத்தில் கொரோனா விழிப்புணர்வு செயல்பாடு நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது கொரோனா விழிப்புணர்வு பதாதைகள் யாழ். நகரப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு, கொரோனா விழிப்புணர்வு செயல்பாட்டினை ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## மேலும் 1,804 பேர் பூரண குணம்

கொழும்பு, ஜூலை 13

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 1,804 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 246,241 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 274,538 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3,502 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

---



## நேற்று வந்தன 26 ஆயிரம் பைசர்!

கொழும்பு, ஜூலை 13

கொரோனா வைரஸுக்கு எதிரான மேலும் 26 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டன.

தடுப்பூசிகளுடன் விமானம் கட்டாரிலிருந்து நேற்று திங்கட்கிழமை காலை 02.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன.

அதனடிப்படையில் இதுவரை 52 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

---

# பெண் மருத்துவரை புகைப்படம் எடுத்த மருத்துவருக்கு மறியல்

கொழும்பு, ஜூலை 13

பெண் மருத்துவர் ஒருவர் ஆடை மாற்றும்போது புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டின் கீழ், ராகமை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மருத்துவர் ஒருவரை 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வெலிசறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மருத்துவர் ராகம மருத்துவர் விடுதியின் பெண் மருத்துவர் ஒருவரின் அறைக்குள் புகுந்து ஆடை மாற்றும்போது புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டின் கீழ் கடந்த 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, சந்தேக நபரை முன்னிலைப்படுத்தியதை தொடர்ந்து நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிசறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# இலங்கை ஜனநாயக நாடு என்பதை அரசு கேள்விக்குறியாக்கியுள்ளது!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 13

**இலங்கை ஜனநாயக நாடு என்பதனை அரசாங்கம் தற்போது கேள்விக்குறியாக்கியுள்ளது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஜனநாயக ரீதியிலான வன்முறையற்ற போராட்டங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமை அல்லது அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றமை ஆகியவை இலங்கை ஜனநாயக நாடு என்பதை கேள்விக்குறியாக்கியுள்ளது.

மேலும் எதிர்கால நலன்களை கருத்தில் கொள்ளாது கல்விக் கொள்கை உள்ளிட்ட முக்கிய விடயங்களில் தான்றோறித்தனமாக அரசாங்கம் சில முடிவுகளை எடுக்கின்றமை ஜனநாயக விரோத செயல்பாடாகும்.

அதாவது தற்போது ஏற்படுத்தப்படவுள்ள சட்டமூலங்கள் ஒட்டுமொத்த நாட்டின் கல்விக்கொள்கைகளை கேள்விக் குறியாக்கியுள்ளது.

இதனை ஒரு சமூகமன்றி பல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் மாணவர்கள் இழந்து போன கல்வியை மீட்டெடுக்க அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்கின்ற பணிகளைக்கூட அரசு மதிப்பதாக தெரியவில்லை.

அத்துடன் அரசாங்கம், ஜனநாயக வழிமுறைகளுக்கு மதிப்பளித்து, அனைத்துச் சமூகமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

இல்லையேல் ஒரு தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் ஒட்டுமொத்த நாட்டு மக்களினாலும் விரைவில் முன்னெடுக்கப்படும்-என்றுள்ளது.

## மேலும் 190 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில்தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 190 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 49,449 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் சுமார் 41,000 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய சுமார் 8,000 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இந்தக் குற்றச்சாட்டில் குற்றவாளியாகும் நபர் ஒருவருக்கு, 10,000 ரூபாய் அபராதமும், 6 மாத சிறைத் தண்டனையும் நீதிமன்றினால் விதிக்க முடியும்-என்றார்.

## இலங்கையில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் 2021 ஜனவரி 29 ஆம் திகதி முதல் ஜூலை 11 ஆம் திகதிவரை 40 இலட்சத்து 9 ஆயிரத்து 740 பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. நேற்றும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ட்ரா செனகா நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள கோவிஷீல்ட் (Covishield), சீனாவின் தயாரிப்பான சினோ பார்ம் (Sinopharm), ரஷ்ய தயாரிப்பான ஸ்புட்னிக் - பை (Sputnik – V), பைசர் ஆகிய தடுப்பூசிகள் இலங்கையில் மக்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன்படி கோவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாவது டோஸை பெற்றுக்கொண்டவர்களில் 3 லட்சத்து 85 ஆயிரத்து 669 பேருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.



2021 மார்ச் 26 ஆம் திகதி முதல் ஜூலை 11 ஆம் திகதிவரை 29 இலட்சத்து 40 ஆயிரத்து 706 பேருக்கு சினோ பாம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது டோஸை 10 இலட்சத்து 46 ஆயிரத்து 840 பேர் பெற் றுள்ளனர்.

ஸ்புட்னிக் - 5 தடுப்பூசி ஏற்றும் பணி ஏப்ரல் 30 ஆம் திகதி ஆரம்பமானது. இது வரை ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 444 பேருக்கு அந்த தடுப்பூசி யின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. இதில் 14 ஆயிரத்து 464 பேர் இரண்டாம் டோஸை பெற்றுள்ளனர்.

பைசர் தடுப்பூசி ஏற்றும் பணி ஜூலை 7 ஆம் திகதி ஆரம்பமானது. அதன் முதலாவது டோஸை இதுவரை 18 ஆயிரத்து 384 பேர் பெற்றுள்ளனர்.




## முறிகண்டியில் நள்ளிரவு விபத்து; வானை மோதிய கனரக வாகனம்

முல்லைத்தீவு, ஜூலை 13

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி பகுதியில் நள்ளிரவு விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தினால் ஏ-9 வீதியூடான போக்குவரத்து சில மணி நேரம் பாதிக்கப்பட்ட நிலையில் அதிர்ஷ்டவசமாக பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

சம்பவம் நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து யாழ். நோக்கி பயணித்த வான் முறிகண்டி பிள்ளையார் ஆலயம் முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது.

வானின் சாரதி ஆலயத்துக்கு சென்றிருந்த நிலையில், வாகனத்தில் சிலர் இருந்துள்ளனர். இந்த நிலையில் ஏ-9 வீதியில் பால கட்டுமானப் பணிக்காக கொங்கிறீற் தூண் ஏற்றிச் சென்ற கனரக வாகனம் வானுடன் மோதியது.

சம்பவத்தில் வான் பலத்த சேதங்களுக்கு உள்ளான போதிலும் வானில் இருந்தவர்கள் அதிஷ்டவசமாகத் தப்பித்துக்கொண்டனர்.

சம்பவம் இடம்பெற்றதை அடுத்து குறித்த கனரக வாகனம் வீதிக்கு குறுக்கே நின்றமையால் சில மணிநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்தனர்.

## 10 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சாவுடன் மூவர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 13

10 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான கேரள கஞ்சா போதைப்பொருளுடன் வடக்கு கடற்பகுதியில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை ஊடகப்பிரிவு இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 344.5 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படை ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## நான்கு மாவட்டங்களில் சில பகுதிகள் முடக்கம்

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் மேலும் 4 மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள் நேற்று அதிகாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி அம்பாறை, கண்டி, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம்ஆகிய மாவட்டங்களிலுள்ள ஐந்து கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் கண்டி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சுதும் பொல மேற்கு மற்றும் கிழக்கு கிராம சேவகர் பிரிவு களில் 6 பகுதிகள் முடக்கப்பட் டுள்ளன.

அத்துடன், நுவரெலியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று அதிகாலை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் நாவலப்பிட்டிய பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கெடபுலா மத்திய தோட்டம் விடுவிக்கப்பட்டுள்ளது

## 14 ஆசிரியர் தொழிற்சங்கங்களின் தீர்மானம் குடாநாட்டு ஆசிரியர் சமூகத்தால் நிராகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மனிதாபிமானமற்ற முறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கையின் 14 ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் இணைவழி கற்பித்தலில் இருந்து விலகியிருக்கும் தீர்மானத்தை யாழ்ப்பாணத்தின் ஆசிரியர் சமூகம் நிராகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்று காலை தொடக்கம் யாழ்ப்பாணத்தின் வலிகாமம், தீவகம், வடமராட்சி உள்ளடங்கலாக அனைத்து கல்வி வலயங்களின் பாடசாலைகளின் மாணவர்களுக்கான ‘சூம்’ செயலி ஊடாகக் கற்றல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் சில வலயங்களைச் சேர்ந்த சில ஆசிரியர்கள் தாமாக வகுப்புக்களை இடைநிறுத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி உட்பட்ட வடக்கின் மற்றைய மாவட்டங்களில் ஆசிரியர் கிளைச் சங்கங்கள் ஒன்றுகூடி வகுப்புக்களைப் புறக்கணிப்பது என்று தீர்மானம் எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சக ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டுகொள்ளாமல் அரசியல் சார்பற்ற நிலையில் ஆசிரியர் சங்கங்கள் ஒன்றிணைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக கைகோத்துள்ள சூழலில் யாழ்ப்பாணத்தின் ஆசிரியர்களும் அதிபர்களும் இவ்வாறு நடந்துகொண்டுள்ளமை தமக்கு பேரதிச்சியாக உள்ளதாக தேசிய ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

ஈழநாடு



# கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் ஏன் கொண்டுவரப்படுகிறது?

அகிலன்

நாடு எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் கொண்டுவருவார் என்ற கோஷத்துடன், மற்றொரு ராஜபக்ஷ இலங்கை அரசியல் களத்தில் 'மீண்டும்' இறக்கப்பட்டிருக்கின்றார். இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ள பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகவும், நிதி அமைச்சராகவும் பதவியேற்ற அதேநேரம், நாடு முழுவதிலும் போராட்டங்கள் வெடித்துள்ளன. விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டங்கள் ஒருபுறம். அரசாங்கம் கொண்டுவந்திருக்கின்ற கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் குறித்த சட்டமூலத்துக்கு எதிரான போராட்டங்கள் மறுபுறம் தீவிரமடைந்திருக்கின்றன.

பஸில் ராஜபக்ஷவைக் களத்தில் இறக்கி, அவர் மூலமாக நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகள் அனைத்துக்கும் அவர் மூலமாகத் தீர்வு கிடைத்துவிடும் என்பதாகக் காட்டிக்கொள்வதற்கு அரசு முற்படுகின்றது. பஸிலின் மீள்வருகைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம், பிரதான பிரச்னைகளிலிருந்து மக்க ளின் கவனத்தை திசை திருப்ப அரசு முற்பட்டிருக்கின்றதா என்ற கேள்வியை எழுப்பியிருந்தது. பஸிலின் வருகையை வெடி கொழுத்திக் கொண்டாடுவதற்காக ஒன்றுகூடியவர்கள் மீது பாயாத தனிமைப்படுத்தல் சட்டம் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்தவர்கள் மீது மட்டும் பாய்ந்திருக்கின்றது.

அதிகரிக்கும் அரச எதிர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்கு தனிமைப்படுத்தல் சட்டத்தை அரசு பயன்படுத்துகின்றது என்பதை இது உறுதிப்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சிகளின் பிரதான குற்றச்சாட்டும் இதுதான். தற்போது நடைமுறையில் இருக்கும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளின்படி கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஒன்றுகூடல்களுக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பங்கெடுத்தவர்கள் கைது செய்யப்படுகின்றனர். அத்தடையை மீறிய குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தப்படுகின்றனர். தனிமைப்படுத்தல் சட்டப் பிரிவுகளையும் ஒழுங்கு விதிகளையும் மீறிய குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் 6 மாத கால சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்படலாம்.

தனிமைப்படுத்தல் சட்டத்தில் முன்னர் இருந்த சில தளர்வுகளை அரசாங்கம் இப்போது இறுக்கமாக்கியுள்ளது. குறிப்பாக, முகக் கவசங்களை அணிந்துகொண்டு, தனிநபர் இடைவெளியைப் பேணும் வகையில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு முன்னர் அனுமதியிருந்தது. ஆனால், அரசுக்கு எதிரான போராட்டங்களை ஒடுக்குவதற்கு வசதியாகவே தனிமைப்படுத்தல் சட்டங்களை அரசு இறுக்கமாக்கியுள்ளது என்ற குற்றச்சாட்டு எதிரணியினரால் முனவைக்கப்படுகின்றது.

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான சட்ட மூலத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்று வட்டத்தில் கடந்த வியாழக் கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் 30 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு கொழும்பு நீதவான் நீ திமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தனிப்பட்ட பிணையில் விடுவிக்கப்பட்ட போதும் - பின்னர் பலாத்காரமாக தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட ஆர்ப்பாட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம், அனைத்து பல்லைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் சிவில் அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதேபோன்று ஜே.வி.பி. முன்னிலை சோஷலிஸ கட்சி ஆகியவையும் குறித்த சட்டமூலத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் பரவலாக ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களை கைது செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுதந்திர சதுக்கத்திற்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட எதிரணி எம்.பி.க்கள் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தார்கள்.

**“ இந்த சட்டமூலம் நாட்டை முற்றுமுழுதாக இராணுவ மயப்படுத்துவதற்கான முதற்படியாகவும், சுயாதீனமான பல்கலைக்கழக செயல்பாடுகளுக்கு சாவுமணி அடிப்பதாகவும் அமைந்திருக்கும் என எதிர்க்கட்சிகளும், மாணவர், ஆசிரியர் சங்கங்களும் அஞ்சுகின்றன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கட்டுப்படாமல் இது செயல்படும் எனக் கூறப்படுகின்றது.**

கொரோனா தொற்றுக்கு எதிராக அரசாங்கம் கொண்டுவந்த சட்ட ஏற்பாடுகள் அரசாங்கத் தரப்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக பொதுமக்கள் அல்லது அவர்கள் சார்பாக அபிப்பிராயங்களையோ கருத்துக்களையோ வெளிப்படுத்த முடியாதவாறு அரசாங்கத் தரப்பிற்கு பாதுகாப்பளிப்பனவாக இருக்கின்றன. அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்த முன்வருவோர் நசுக்கப்படுகின்றனர். 20 ஆவது திருத்தச் சட்டம், கொழும்பு துறைமுக நகர ஆணைய சட்டம் உட்பட பல விடயங்களை அரசாங்கம் இந்த சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மக்களின் குரல்வளையை நெருக்கிக்கொண்டே அரசாங்கம் நிறைவேற்றிக் கொண்டுள்ளது

கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தினூடாக இலங்கையில் இருக்கும் அரச பல்கலைக்கழகங்களில் குவிந்திருக்கும் கல்விமுறைக்கு சமாந்தரமான சில விடயங்களில் மேலாதிக்கத்துடன் இருக்கக்கூடிய தனியார், இராணுவ உயர் கல்வியை சட்ட ரீதியாக உறுதி செய்ய அரசாங்கத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள்தான் தற்போது எதிரணியினர் வீதிகளில் இறங்குவதற்குக் காரணம்.

இலங்கையின் கல்வி முறையை சீர்திருத்த தற்போதும் ஒரு குழு இயங்கிக்கொண்டிருக்கிறது. அக்குழுவில் இயங்குபவர்கள் அரசாங்கத்தின் தேவை கருதிசெயற்படுபவர்களாக இருப்பதாகவும் தொழில்நுட்ப தொழில்படையை உருவாக்கும் வகையில் கல்விமுறையை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் கொண்டுள்ள அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப கல்வி கொள்கை, நடைமுறைகளை கொண்ட கல்விமுறையை உருவாக்க இருப்பதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலைத்துறை கல்வியை நிராகரிப்பவராக உள்ள ஒருவர். அவருக்குப் பின்னணியில் இருந்து செயற்படும் 'வியத்மக' அமைப்பினரும், இராணுவ மயமாக்கலையும், பொருளாதார நலன்களையும் மட்டும் இலக்காகக் கொண்டதாக கல்வி முறை அமைந்திருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள். அழகியல் கல்வி என்பது அவர்களைப் பொறுத்த வரையில் தேவையற்ற ஒன்று. பொருளாதார சுழற்சிக்கேற்ற தொழிற் படையை உருவாக்குவதை மட்டும் நோக்காக கொண்டு அமைக்கப்படும் கல்வியால் மக்களின் வாழ்விற்கான தன்னாட்சியும் ஆட்சியாளர்கள் பொருளாதார தன்னாட்சியும் ஏற்படமுடியும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள் அவர்கள்.

இந்தப் பின்னணியில்தான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான சட்ட மூலத்தை பாராளுமன்றதத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் அரச பல்கலைக்கழக பொறிமுறைக்கும் வெளியில் அப்பால் இராணுவ முறைமைக்குட்பட்ட தனியார் கல்வியை வழங்கும் இன்னொரு நிறுவனத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. அதற்கான இராணுவ கட்டுப்பாட்டில் இயக்குநர் சபை இருப்பதுடன், மாணவர்கள் தெரிவு கட்டணம் அறவிடல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொறிமுறைக்குட்பட்டதாக இராது அங்கு கற்பவர்களும், கற்பிப்பவர்களும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குட்பட்டவர்களாக இருப்பார்கள்.

இது நாட்டை முற்றுமுழுதாக இராணுவ மயப்படுத்துவதற்கான முதற்படியாகவும், சுயாதீனமான பல்கலைக்கழகச் செயற்பாடுகளுக்கு சாவுமணி அடிப்பதாகவும் அமைந்திருக்கும் என எதிர்க்கட்சிகளும், மாணவர், ஆசிரியர் சங்கங்களும் அஞ்சுகின்றன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கட்டுப்படாமல் இது செயல்படும் எனக் கூறப்படுகின்றது. அதனால்தான் தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கம், அடக்குமுறையைப் பிரயோகிக்கும் என்பதைத் தெரிந்துகொண்டும் அந்த அமைப்புக்கள் சீற்றத்துடன் களத்தில் இறங்கிப் போராட்டங்களை முன்னெடுத்தன. அரசாங்கமும் பொலிஸாரைப் பயன்படுத்தி கடுமையான அடக்குமுறையை கையில் எடுத்து போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்தார்கள். ஆனால், இது போராட்டத்தின் முடிவாக அமையுமா?

2009 இல் போர் முடிவடைந்த பின்னர் இலங்கையின் அரசியல் - நிர்வாகம் என்பனவற்றில் இராணுவ மயமாக்கல் ஆரம்பமாகியது. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் இது தீவிரமடைந்தது எனச் சொல்லமுடியும். அரச நிர்வாகம், இராஜதந்திர சேவைகள் என்பவற்றின் தொடர்ச்சியாக கொரோனா ஒழிப்புச் செயலணி கூட இராணுவ மயமானதாகவே உருவாக்கப்பட்டது. அதன் உச்சகட்டமாக இப்போது பல்கலைக்கழகக் ;கல்வியில் மாற்றங்களைச் செய்வதற்கான வியூகங்கள் வகுக்கப்படுகின்றன. கிளர்ந்தெழும் எதிர்ப்புக்களை முறியடிக்க தற்போதைய கொரோனா கால தனிமைப்படுத்தல் சட்டங்கள் தமக்கு உதவும் என்ற நம்பிக்கை அரசுக்குள்ளது. ■





# தொல்லியல் திணைக்கள செயல்பாடுகள் சந்தேகத்தை ஏற்படுத்துவது ஏன்?

**வடக்கில் 251 தொல்லியல் சின்னங்கள் உள்ளனவென தெரிவிக்கும் தொல்லியல் திணைக் களம் அதில் 108 சின்னங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றது. எஞ்சிய 143 சின்னங்களிற்கும் வர்த்தமானி அறிவித்தல் கிடையாது.**

ந.மதியழகன்

வடக்கு கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்களை, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் குறிப்பிட்டு, தொல்லியல் திணைக்களம் அவற்றை தமது ஆளுகைக்குள் கொண்டுவந்தாலும், அவற்றில் 144 இடங்கள் குறித்து இன்று வரை வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை. தமிழ் மக்கள் இதனைச் சந்தேகத்துக்குரிய ஒரு செயல்பாடமாகவே பார்க்கின்றார்கள். இந்த நிலையில் மேலும் சில பகுதிகளை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தவை எனக் கூறி, தமது ஆளுகைக்குள் கொண்டுவர அவர்கள் முற்படுவது சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றது.

கிழக்கு மாகாண தொல்லியல் செயலணிக்கு 14 பெரும்பான்மை இனத்தவர்களை நியமித்தபோதும் சிறுபான்மையினர் எவரையும் நியமிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கிழக்கு மாகாணம் அதிகளவுக்கு தமிழர்களைக் கொண்டதாக இருக்கின்ற போதிலும், இந்தச் செயலணிக்கு தமிழர்கள் நியமிக்கப்படவில்லை என்பதையிட்டு, தமிழ் அரசியல் கட்சிகள் கேள்வி எழுப்பியிருந்தன. இதேநேரம் கிழக்கு செயலணியில் ஒரு தமிழரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன் எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பின்னர் அதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மௌனமாகிவிட்டார்.

தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளின் மூலம் குறிப்பிட்ட சில இடங்களிற்குள் செல்ல முடியாது ஓர் இனத்தவர்கள் தடுக்கப்படும் நிலை காணப்படுகின்றது. ஓர் இனத்தவர்கள் மட்டும் எதையும் செய்யலாம் என்ற நிலமையும் தோற்றுவிக்கப்படுகின்றது என்ற கருத்து சிறுபான்மையினத்தவர்கள் மத்தியில் உருவாகியுள்ளது. இந்தப் பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்கள்தான் இதற்குக் காரணம். தொல்லியல் திணைக்களத்தில் செயற்பாடுகள் தமிழ் மக்களுடைய இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் உள்ளது என தமிழ்க் கட்சிகள் குற்றச்சாட்டை முன்வைப்பதற்கும் பல காரணங்கள் உள்ளன.

வடக்கில் 251 தொல்லியல் சின்னங்கள் உள்ளனவெனத் தெரிவிக்கும் தொல்லியல் திணைக்களம் அதில் 108 சின்னங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றது. எஞ்சிய 143 சின்னங்களிற்கும் வர்த்தமானி அறிவித்தல் கிடையாது. வர்த்தமானி அறிவித்தல்கள் சகல தரப்பின் இணக்கத்தின் பின்பு அன்றி தாமாகவே வெளியிடுகின்றனர் என்ற விமர்சனத்தின் மத்தியிலும் இந்த நிலைமையே காணப்படுகின்றது.

இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் 109 இடங்கள் உள்ளபோதும் 57 இடங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தல் உள்ளமையை தொல்லியல் திணைக்களத்தின் தரவுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 10 இடங்களும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 8 இடங்களும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 11 இடங்களும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 11 இடங்களும் தொல்லியல் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் 12 இடங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 2 இடங்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 5 இடங்களும், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 5 இடங்களும், உடுவிலில் 4 இடங்களும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 7 இடங்களும் காணப்படுகின்றது. கோப்பாயில் 10 இடங்களும், கரவெட்டியில் 9 இடங்களும் காணப்படுகின்ற பருத்தித்துறையில் 7 இடங்களும் மருதங்கேணியில் 5 இடங்களும் கானப்படுவதோடு, சாவகச்சேரியில் 3 இடங்களுமாக மொத்தம் 109 இடங்கள் கானப்படுகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் காணப்படும் 109 இடங்களில் 57 இடங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. எஞ்சிய 52 இடங்களிற்கும் வர்த்தமானி அறிவித்தல் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 21 இடங்கள் குறித்த திணைக்களத்தின் கீழ் உள்ளபோதும் அவற்றில் 8 இடங்களிற்கு மட்டுமே வர்த்தமானி அறிவித்தல் உள்ளதனை திணைக்களம் தகவல் அறியும் சட்டத்தின் மூலம் உறுதி செய்துள்ளது. இவ்வாறு காணப்படும் 21 இடங்களில் அதிகபட்சமாக பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 15 இடங்கள் காணப்படும் அதே நேரம், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 3 இடங்களும், பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 2 இடங்களும் காணப்படுவதோடு கண்டாவளையில் ஓர் இடமுமாகவே மொத்தம் 21 இடங்கள் உள்ளன. இந்த 21 இடங்களில் 8 இடங்களிற்கு மட்டுமே திணைக்களத்திடம் வர்த்தமானி அறிவித்தல் உண்டு. எஞ்சிய 13 இடங்களிற்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளிவரவில்லை என்பதும் உறுதிசெய்யப்படுகின்றது.

கிளிநொச்சியில் குறிப்பிடப்படும் 8 இடங்களிற்குமான வர்த்தமானி 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதியே வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்திலே 43 இடங்களும், மன்னார் மாவட்டத்தில் 25 இடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 53 இடங்களும் திணைக்களத்தின் வசம் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள 43 இடங்களில் 8 இடங்களிற்கும் , மன்னார் மாவட்டத்தின் 25 இடங்களில் 14 இடங்களிற்கு மட்டுமே வர்த்தமானி வெளியாகியுள்ள அதே நேரம், முல்லைத்தீவு மாவட்டத்தின் 53 இடங்களில் 23 இடங்களிற்கே வர்த்தமானி அறிவித்தல் உள்ளதாக திணைக்களத் தகவல் உறுதி செய்துள்ளது.

வடக்கில் 63 தொல்லியல் சின்னங்கள் எனக் குறிப்பிடப்படும் இடங்கள் குறித்து தேவையான ஆவணங்கள் திணைக்களத்திடம் இல்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 109 சின்னங்களில் 38 இடங்களிற்கும். கிளிநொச்சி மாவட்டத்திலே 4 இடங்களிற்கு இடத்தின் வரைபட அளவுகளோ அல்லது ஆவணங்கள் எவையும் இல்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று வவுனியா, முல்லைத்தீவு , மன்னார் மாவட்டங்களிலே மொத்தம் 21 இடங்களிற்கு திணைக்களத்திடம் எந்தவோர் ஆவணம் இன்மையும் கண்டறியப்படும் வகையில் வடக்கு மாகாணத்திலே மொத்தம் 63 இடங்களிற்கு எந்தவொரு ஆவணங்களும் இல்லாத தன்மையே காணப்படுகின்றது.

தொல்லியல் திணைக்களத்தின் சின்னங்களைப் பேணி வரலாற்றை பாதுகாப்பதே திணைக்களத்தின் முக்கிய பணியெனக் கூறினாலும், சில இடங்களின் வரலாற்றை திரிவுபடுத்துவதையும் இந்த திணைக்களம் மேற்கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருக்கின்றார். அதற்கான உதாரணமாக நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை அவர் உதாரணம் காட்டுகின்றார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நெடுந்தீவில் வரலாற்றை பாதுகாக்க எனக் கூறி ஓர் இடத்தை வர்த்தமானி மூலம் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடம் எனக் குறிப்பிடும் தொல்லியல் திணைக்களம் வரலாற்றை திரிபுபடுத்துகின்றது என்பதுதான் சிறிதரனின் குற்றச்சாட்டு.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டைக்கு இதுவரை 3 தடவைகள் தொல்லியல் திணைக்களம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளது. இவற்றின்போது அளவீடுகள் மாறுபட்டால் பரவாயில்லை. ஆனால், இடத்தின் வரலாற்றுத் தொன்மையை பாதுகாப்பதே தொல்லியல் திணைக்களத்தின் முக்கியமான பணியாக காணப்படுகின்றபோதும் தொல்லியல் திணைக்களமே வரலாற்றை மாற்றுகின்றது என அவர் குற்றஞ்சாட்டுகின்றார்.

“வெடியரசன் கோட்டை” என்ற சரியான பெயருடன் 2007-02-23 அன்று வர்த்தமானி வெளியிடப்பட்ட திணைக்களம், பின்பு இதே இடத்தை 2011-12-30 அன்று “தூப” என்னும் பெயரில் வர்த்தமானி பிரசுரித்தனர். பின்பு 3ஆவது தடவை 2020-11-28இல் இதே திணைக்களம் ‘துறவிகள் மடம்’ என வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்தது. அவ்வாறானால் இந்த திணைக்களம் வரலாற்றை பாதுகாக்கின்றதா அல்லது திரிபுபடுத்துகின்றதா என பாராளுமன்ற உறுப்பினர் எழுப்பும் கேள்விக்கு விடை தேட முடியவில்லை.

மன்னார் மாவட்ட நீதிமன்றக் கட்டிடத் தொகுதி தமது திணைக்கள ஆளுகைப் பிரதேசத்திற்குள் வருவதனால் அதனை அகற்றித் தருமாறு திணைக்களம் கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி மாவட்ட நிர்வாக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், சுற்றுலா அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள்,பொலிசார் அடங்கிய குழுவினர் மன்னார் பகுதியில் உள்ள கோட்டை மற்றும. அதனைச் சூழவுள்ள பகுதிகளை சுற்றுலாப் பகுதியாக மாற்றுவது தொடர்பில் ஆராய்ந்ததோடு அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், மன்னார் கோட்டை தொல்லியல் அடையாளமாக 1983ஆம் ஆண்டே வர்த்தமானி வெளியிடப்பட்டு விட்டது எனத் தெரிவித்தனர். இவ்வாறு வர்த்தமானி வெளியிடப்படும் சமயம் கோட்டையில் இருந்து 400 மீற்றர் தூரம் வரையில் திணைக்களத்தின் ஆளுகைப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றை பாதுகாத்து ஆவணமாகவும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டிய முக்கிய திணைக்களமான தொல்லியல் திணைக்களம், வரலாற்றைத் திரிவுபடுத்தும் திணைக்களமாக மாற்றப்பட்டுவிட்டதா என்ற கேள்வியை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பியிருக்கின்றார்கள்.


Journo.lk ■

# புலமைச் சிகரம் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்


❖ **பழங்களின் விலைகளை அவதானித்து விடை எழுதுக.**




07. மூன்று பழங்களிலும் ஒவ்வொன்று வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

1) ரூபாய் 42.00 2) ரூபாய் 47.00 3) ரூபாய் 41.00

08. பின்வரும் குறியீடுகளிற்குரிய பெறுமானங்களை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான குறியீடு இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க?




09. ஆங்கில எழுத்துக்களும் அவற்றின் பெறுமானங்களும் தரப்பட்டுள்ளன. அதனை அவதானித்து ரூ. 5481 என்பது குறிக்கும் சரியான ஆங்கில எழுத்து வடிவத்தைத் தெரிவு செய்க.

R. ADEH ⟶ ரூ. 6158
R. GBFD ⟶ ரூ. 7421
R. AFHE ⟶ ரூ. 6285

1) R. EBHC 2) R. EBFD 3) R. EBHD

10. மாலாவிற்கு 8 வயதாக இருக்கும்போது அவளது அப்பாவின் வயது 32 ஆகும். மாலாவின் வயது இரு மடங்கான போது அவளது அப்பாவின் வயது யாது?

1) 64 2) 40 3) 16

11. ஒரு வரிசையில் 25 மாணவர்கள் உள்ளனர். குமரன் அவ்வரிசையில் நடுவில் உள்ளான். குமரனுக்குப் பின்னால் ஆறாவதாக கண்ணன் நின்றான் எனின், கண்ணனுக்கும் குமரனுக்கும் இடையில் எத்தனை பேர் உள்ளனர்.


1) 6 2) 7 3) 5

12. கிணறு ஒன்றை வெட்டுவதற்கு 5 மனிதர்களுக்கு 12 நாட்கள் எடுத்தன. அவ்வேலையை 6 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்.

1) 10 நாட்கள் 2) 6 நாட்கள் 3) 60 நாட்கள்


❖ **வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.**

13.




1) 26 2) 23 3) 12

14.





1) 3 2) 6 3) 14

15.




அட்டை Aயிலுள்ள ✿ எனும் குறியீட்டின் இடத்தில் B யிலுள்ள ◇ எனும் குறியீடு அமையுமாறு ஒட்டிய பின் காணக்கூடிய தோற்றத்தைத் தெரிவு செய்க.




❖

| | நிரல்1 | நிரல்2 | நிரல்3 |
|---|---|---|---|
| நிரை1 | லை | இ | க |
| நிரை2 | டு | பா | பூ |

முதலாம் நிரல் இருக்கும் இடத்திற்கு இரண்டாம் நிரலையும் இரண்டாம் நிரல் இருந்த இடத்திற்கு முதலாம் நிரலையும் மாற்றுக.


16. மேற்கூறப்பட்ட மாற்றங்களைச் செய்த பின்பு முதலாம் நிரையிலுள்ள நிரல்-1 ஐயும் நிரல்-2 ஐயும் சேர்க்கும்போது வரும் சொல் என்ன?

1) பாடு 2) இலை 3) பூ

17. 3ஆம் நிரலில் 2 ஆம் நிரையில் அமைந்துள்ள ஒரெழுத்துச் சொல் என்ன?

1) க 2) பா 3) பூ

18. பின்வரும் படங்களை ஒழுங்குபடுத்தும்போது சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.




1) CABD 2) CADB 3) CABD

19. கரன் படம் ஒன்றைக் காட்டி இதில் இருப்பவர் எனது சகோதரி என்றான், எனினும் இவள் எனது தங்கை அல்ல எனின், படத்தில் இருப்பவருக்கு கரன் என்ன உறவு முறை?

1) அக்கா 2) அண்ணா 3) தம்பி

20. சசியை விட மதி உயரம் கூடியவள். மதியை விட ரதி உயரம் குறைந்தவள். மதியை விட அபி உயரம் கூடியவள் எனின் மிகவும் உயரம் கூடியவர் யார்?

1) மதி 2) அபி 3) ரதி

# ராஜபக்ஷ அரசுடன் மோத ஓரணியில் திரளுங்கள்!

## சகல தரப்புக்கும் ரணில் அழைப்பு

**கொழும்பு, ஜூலை 13**

**"நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாகியுள்ள ராஜபக்ஷ அரசுடன் மோதும் பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாத்திரம் கிடையாது. ஐக்கிய மக்கள் சக்தியினர் மற்றும் ஏனைய தரப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகப் போராட வேண்டும்."**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது பிரதான இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும்போது பிற தரப்பினருடன் மோதி நேரத்தை வீணடிப்பது பயனற்றதாகும். நடைமுறையில் நாடு எதிர்கொண்டுள்ள சவால்களில் இருந்து நாட்டு மக்களை மீட்க வேண்டுமாயின் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து அரசுடன் மோத வேண்டும்.

தேசிய பொருளாதாரம், ஜனநாயகம் ஆகியவை பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. இந்த நெருக்கடிகளிலிருந்து நாட்டையும் மக்களையும் நாம் காப்பாற்ற வேண்டும்" - என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியை அடிமட்டத்தில் இருந்து பலப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (இ)



# வீட்டின் மேல் மாடியில் கஞ்சா செடிகளை வளர்த்தவர் கைது

கொழும்பு, ஜூலை 13

மிரிஹான - தலபத்பிட்டிய பகுதியில் வீடொன்றின் மேல் மாடியில் கஞ்சா செடிகளை வளர்த்து வந்த ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (இ)

# தடுப்பூசிகளால் எய்ட்ஸ் நோய் பரவுகிறதா? அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 13

"கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தும் தடுப்பூசிகளால் எயிட்ஸ் நோய் பரவுகின்றது எனப் பொய்யான பிரசாரம் செய்யப்படுகின்றது. தடுப்பூசிகளால் எய்ட்ஸ் பரவ எந்தவொரு வாய்ப்பும் இல்லை. தடுப்பூசிகள் இரத்த மாதிரிகளால் தயாரிக்கப்படுவதில்லை."

- இவ்வாறு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தடுப்பூசிகளில் எய்ட்ஸ் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கூறுவதை முழுமையாக நிராகரிக்கின்றோம். அதேபோல் வேறு நோய்க்கான மருந்தொன்று இலங்கைக்கு இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்ட வேளையில் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. பின்னர் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுகளுக்கு உட்படுத்தி அதனை நிராகரித்த பின்னர் மீண்டும் குறித்த மருந்தை இறக்குமதி செய்யத் தீர்மானம் எடுத்தோம்.

ஆகவே, இந்த மருந்துக்கும் தடுப்பூசிக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை.

கொரோனா வைரஸ் உலகளவில் பரவிக் கொண்டுள்ள நிலையில் இலங்கையில் இப்போதும் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டில் உள்ளது. தடுப்பூசி ஏற்றுகின்ற காரணத்தினாலேயே இந்த வேலைத் திட்டம் வெற்றியடைந்துள்ளது.


எனவே, மக்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வேண்டும் என நாம் வலியுறுத்தி வருகின்ற நிலையில் தவறான கருத்துகளை பரப்பி மக்களை குழப்பும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது" - என்றார். (இ)

# மஸ்கெலியாவில் அரசுக்கு எதிராக எதிரணி உறுப்பினர்கள் போராட்டம்

மஸ்கெலியா, ஜூலை 13

மஸ்கெலியா பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர்கள், சபைக்கு முன்னால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அரசுக்கு எதிராக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எரிபொருட்களின் விலை உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்குமாறு வலியுறுத்தியும், போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்தும், மலையகத்தில் தடுப்பூசி திட்டத்தை துரிதப்படுத்துமாறு அழுத்தம் கொடுத்துமே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




அத்துடன் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும் வேலை நாட்கள் குறைக்கப்பட்டு, தொழில் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்பள உயர்வு என்பது கண்துடைப்பு நாடகமே. கைக்காசுக்கு வேலை செய்பவர்களுக்கு இன்னமும் 700 ரூபாய் வழங்கப்படுகின்றது. எனவே, ஆயிரம் ரூபாய் விவகாரத்தில் எழுந்துள்ள பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அதேபோல ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், ஊடக அடக்குமுறைக்கு இடமளிக்க முடியாது எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். (இ)

# சொந்த உறவுகள் தாக்குதல் இளம் குடும்பஸ்தர் மரணம்!

மஹியங்கனை, ஜூலை 13

மஹியங்கனை, அத்தேஉல பகுதியில் தந்தை, தாய், சகோதரி மற்றும் சகோதரியின் கணவன் ஆகியோர் இணைந்து தடியால் தாக்கியதில் 28 வயதுடைய இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இறந்தவரின் தந்தை, தாய், சகோதரி மற்றும் சகோதரியின் கணவன் ஆகியோர் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மஹியங்கனை நீதவான் நீதிமன்றம் இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. சுனில் நிஷங்க என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (இ)



# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

பத்தனை, ஜூலை 13

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை - ரொசிட்டா பண்ணைக்கு அருகாமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொட்டகலை நகரிலிருந்து லொக்கீல் நோக்கிப் பயணிப்பதற்குத் தயாரான வான் ஒன்றுடன் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர்.

குறித்த இருவரும் கொட்டகலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்தில் தொடர்பில் பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# கொழும்பில் பொலிஸ் திடீர் சுற்றிவளைப்பு; ஹெரோயினுடன் 4 இளைஞர்கள் மாட்டினர்!

கொழும்பு, ஜூலை 13

கொழும்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புகளில் போதைப்பொருட்களுடன் நான்கு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்று தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திடிய பிரசேத்தில், கல்கிசை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அங்குலான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனாவ பிரதேசத்தில் அங்குலான பொலிஸ் அதிகாரிகளுக் கூடாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பிகொட்டுவ பிரதேசத்தில் கிராண்ட்பாஸ் பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒடியன் சந்தியில் கல்கிசை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 4 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.



இவ்வாறு கைதுசெய்யப்பட்ட அனைவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# கொரோனாவிலிருந்து தப்ப விரைவில் 3ஆவது தடுப்பூசி!



## அமெரிக்க ஜனாதிபதியின் ஆலோசகர்

வாஷிங்டன், ஜூலை 13

அமெரிக்கர்களுக்கு எதிர்வரும் மாதங்களில் மூன்றாவது கொரோனா தடுப்பூசி தேவைப்படும் என்று ஜனாதிபதி பைடனின் தலைமை மருத்துவ ஆலோசகரும் தொற்றுநோய் நிபுணருமான அன்ரனி பாசி தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கான இரண்டு தடுப்பூசிகளை தொடர்ந்து 12 மாதங்களில் கூடுதலாக மேலும் ஒரு தடுப் பூசி போடப்பட வேண்டும் எனவும், அதற்கு அங்கீகாரம் கோரியும் அமெரிக்க அரசிடம் தடுப்பூசி தயாரிப்பு நிறுவனமான பைசர் கோரியிருந்தது.

எனினும், இந்த நேரத்தில் கூடுதல் தடுப்பூசி அவசியம் எனக் கருதவில்லை என்று கூறி பைசரின் விண்ணப்பத்தை நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் உணவு மற்றும் மருந்து நிர்வாகத் துறைகள் நிராகரித்தன.

இந்நிலையில், இப்போது நம்மிடம் உள்ள தரவுகளின் அடிப்படையில் மக்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், அதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அதற்கான தரவுகள் கிடைக்கும்போது வயது மற்றும் உடல்நிலையைப் பொருத்து மூன்றாவது தடுப்பூசி செலுத்துவது குறித்து அரசு வலியுறுத்தலாம் என்று அன்ரனி பாசி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 48 வீதம் பேர் முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளனர். நாட்டின் சில பகுதிகளில் நோய் தடுப்பு விகிதம் குறைவாக உள்ளது. அங்கு டெல்டா வகை கொரோனா தொற்று அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மக்கள் முன்னிலையில் தோன்றினார் பாப்பரசர்!

ரோம், ஜூலை 13

சத்திர சிகிச்சையின் பின்னர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் முதன்முதலாக பொதுமக்கள் முன்னிலையில் தோன்றினார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ரோம் மருத்துவமனையின் பத்தாவது மாடியின் உப்பரிகையில் தோன்றிய அவர் மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

உப்பரிகையில் சுமார் பத்து நிமிடங்கள் நின்ற அவர், “நான் குணமடைய பிரார்த்தித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்”, என்று தெரிவித்தார்.

84 வயதான பிரான்சிஸ், ஜூலை 4 ஆம் திகதி தனது பெருங்குடலின் ஒரு பகுதியை அகற்றுவதற்காக சத்திர சிகிச்சை செய்துகொண்டார். தொடர்ந்து மருத்துவமனையில் ஓய்வு பெற்று வந்தார்.

2013 இல் பாப்பரசருக்கு தெரிவான பின்னர் அவர் மேற்கொண்ட முதல் சத்திரசிகிச்சை இதுவாகும். (ஐ)

# மின்னல் தாக்கியதில் 68 பேர் உயிரிழந்தனர்!

புதுடில்லி, ஜூலை 13

இந்தியாவின் உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் வெவ்வேறு மின்னல் தாக்கங்களில் நேற்று 68 பேர் உயிரிழந்தனர்.

வட இந்தியாவில் பல பகுதிகளில் கடும் மழை பெய்து வருகின்றது. இந்த நிலையிலேயே 68 பேர் மின்னல் தாக்கங்களில் உயிரிழந்தனர்.

உத்தரபிரதேசத்தில் நேற்று 41 பேர் உயிரிழந்தனர். இது போல ராஜஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை நடந்த மின்னல் தாக்கத்தில் 20 பேரும், மத்திய பிரதேசத்தில் ஏழு பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஒரேபாலினத்தவருக்கு குழந்தை இஸ்ரேல் உயர்நீதிமன்று அதிரடி!

ஜெருசலேம், ஜூலை 13

ஒரே பாலினத்தவர், வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள இருந்த தடையை, மேற்காசிய நாடான இஸ்ரேலின் உச்ச நீதிமன்றம் நீக்கியுள்ளது.

இஸ்ரேலில் வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்வது தொடர்பான சட்டம் கடந்தாண்டு நடைமுறைக்கு வந்தது. அதில், ஒரே பாலினத் திருமணம் செய்த ஆண்கள், வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதிக்கவில்லை. இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இந்த விடயத்தில் கொள்கை முடிவு எடுக்கும்படி கடந்தாண்டு உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, “ஓராண்டு அவகாசம் கொடுத்தும் அரசாங்கமும் பாராளுமன்றமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரே பாலினத் திருமணம் செய்த ஆண்கள், வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற அனுமதிக்கப்படுகின்றது” என்று மன்று தீர்ப்பளித்தது. (ஐ)

# 29 வயது பேரனுக்கு திருமணம் முடிக்க 14 வயது பேர்த்தியை கடத்திய பாட்டி!

ஹைதராபாத், ஜூலை 13

தனது 29 வயது பேரனுக்கு திருமணம் செய்து வைப்பதற்காக 70 வயது பாட்டி ஒருவர் தனது 14 வயது பேர்த்தியை கடத்திச் சென்றாரெனக் கூறப்படுகிறது.

இந்தியாவின் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் திருப்பதியை அடுத்துள்ள திருச்சானூர் என்ற இடத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வகுளம்மா என்ற 70 வயது பாட்டியே தனது மகன் வழி பேரனுக்கு திருமணம் செய்வதற்காக சிறுமியான தனது சொந்த பேர்த்தியை கடத்தி சென்றுள்ளார்.

இந்த சம்பவம் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. சம்பவ தினத்திலிருந்து அவருடைய மகன், மருமகள், பேரன் ஆகியோரையும் காணவில்லை என்று கூறப்படுகின்றது.

கடத்தப்பட்ட சிறுமியின் தாயார் இது தொடர்பில் திருச்சானூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)



# முன்னாள் ஜனாதிபதிக்கு சிறை: தென்னாபிரிக்காவில் வன்முறை

ஜொகன்னஸ்பேர்க், ஜூலை 13

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஷூமா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அந்த நாட்டின் இரு மாகாணங்களில் வன்முறைகள் வெடித்துள்ளன.

இதனால் ஒரே இரவில் கடைகள் சூறையாடப்பட்டன, நெஞ்சாலைகளின் ஒரு பகுதி மூடப்பட்டது. குறைந்தது 62 வன்முறையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தென்னாபிரிக்க பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கிற்காக ஷூமா கடந்த வாரம் 15 மாத சிறைத்தண்டனை அனுபவிப்பதற்காக சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். 79 வயதான முன்னாள் ஜனாதிபதி 2009 முதல் 2018 வரை ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் அரசு ஆதரவு விசாரணைக்கு முன் சாட்சியமளிக்க நீதிமன்ற உத்தரவை மீறியதற்காக சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் ஷூமாவின் ஆதரவாளர்களின் கலவரம் கடந்த வாரம் அவரின் சொந்த பிராந்தியமான குவாசுலு - நடால் மாகாணத்தில் தொடங்கி வார இறுதியில் தென்னாபிரிக்காவின் மிகப் பெரிய நகரமான ஜொகன்னஸ்பேர்க்கை உள்ளடக்கிய கௌடெங் மாகாணத்திற்கு பரவியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 60 இந்துக்கள் பாக். இல் கட்டாய மத மாற்றம்!

இஸ்லாமாபாத், ஜூலை 13

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் 60 இந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

சிந்து மாநிலத்தில் வசிக்கும் நகராட்சி தலைவர் அப்துல் ரவூப் நிஜாமி இந்த கட்டாய மத மாற்றத்துக்கு ஏற்பாடு செய்தாரெனக் சாடப்படுகின்றது.



பாகிஸ்தானில் 45 இலட்சம் இந்துக்கள் உள்ளனர். பாகிஸ்தான் மக்கள் தொகையில் 2 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் இந்துக்களாவர். இவர்களில் பெரும்பாலானோர் சிந்து மாநிலத்தில் வசிககிறார்கள்.

இந்த நிலையிலேயே சிந்து மாகாணத்தில் 60 பேர் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

சிந்து மாநில நகராட்சி தலைவர் அப்துல் ரவூப் நிஜாமியின் முகநூல் பதிவில் இந்த விடயம் உறுதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## யூரோ கிண்ண உதைபந்தாட்டம்:

# 50 ஆண்டுகளின் பின்னர் சம்பியன் இத்தாலி வசம்!




லண்டன், ஜூலை 13

52 ஆண்டுகளுக்கு பின் யூரோ கிண்ண உதைபந்தாட்டப் தொடரில் சம்பியன் பட்டம் வென்று இரண்டாவது முறையாக கிண்ணத்தை கைப்பற்றியது இத்தாலி.

லண்டன் வெம்ப்ளி அரங்கில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்த யூரோ கிண்ண இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணியை சமநிலை தவிர்ப்பு உதை மூலம் 2-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி சம்பியனானது இத்தாலி.

இத்தாலி அணியின் கோல் காப்பாளர் டோனாருமா அருமையாக 3 கோல்களை தடுத்து வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தார். இதேபோல, இத்தாலி வீரர் லியானார்டோ போனுஸி ஆட்ட நேரத்தில் ஒரு கோலையும், சமநிலை தவிர்ப்பு உதையில் ஒரு கோல் என இரு கோல்கள் அடித்து ஆட்டநாயகன் விருது பெற்றார்.

இங்கிலாந்து ரசிகர்கள் கடந்த 1966 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற பின் தங்கள் நாட்டு அணி எந்தக் கிண்ணத் தயும் பெரிதாக வெல்வில்லை என்பதால் யூரோ கோப்பையை வெல்லும் என எதிர்பார்ப்புடன் இருந்தனர்.

யூரோ கோப்பையில் கடந்த 1968ஆம் ஆண்டு 3ஆவது இடம் பிடித்தது இங்கிலாந்து. இதனால், யூரோ கிண்ண இறுதிப்போட்டிக்கே இந்தமுறைதான் இங்கிலாந்து அணி தகுதி பெற்றது. இதனால், அந்த நாட்டு ரசிகர்களும், இங்கிலாந்து ராணி எலிசபெத்தும் ஆர்வத்துடன் இருந்தனர். இங்கிலாந்து அணியினருக்கு ராணி எலிசபெத் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். ஆனால், இங்கிலாந்துக்கு இந்த முறையும் ஏமாற்றமே மிஞ்சியது.

ஆனால், இங்கிலாந்து அணிக்கு ஆறுதலாக , அந்த அணி வீரர் லூக் ஷா ஆட்டம் தொடங்கிய ஒரு நிமிடம் 57 வினாடிகளில் கோல் அடித்து யூரோ கோப்பையில் அதிவிரைவாக கோல் அடித்த வீரர் எனும் சாதனையைப் பதிவு செய்தார்.

இங்கிலாந்து வீரர் லூக் ஷா ஆட்டத்தின் தொடக்கத்திலேயே அடித்த கோலால், அந்த அணி முதல்பாதி வரை 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இதனால் இங்கிலாந்து ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். ஆனால், 2ஆம் பகுதியில் இத்தாலி வீரர்கள் இங்கிலாந்துக்கு பதிலடி கொடுத்தனர்.

ஆட்டத்தின் 67ஆவது நிமிடத்தில் இத்தாலி வீரர் போனுஸி கோல் அடித்து கோல் கணக்கை 1-1 என்று சமன் செய்தார். அதன்பின் கூடுதல் நேரத்தில் இரு அணிகளும் கோல் அடிக்க முயன்றும் முடியவில்லை. இதைத் தொடர்ந்து சமநிலை தவிர்ப்ப உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

முதல்வாய்ப்பில் இத்தாலி வீரர் பெரார்டியும், இங்கிலாந்து அணியின் தலைவர் கேனும் கோல் அடித்தனர். 2ஆவது வாய்ப்பில் இத்தாலி வீரர் பெலோட்டி அடித்த கோலை இங்கிலாந்து கோல் காப்பாளர் தடுத்து விட்டார். ஆனால், இங்கிலாந்து வீரர் மெக்குயர் கோல் அடிக்கவே 2-1 என்று முன்னிலை பெற்றது.


3ஆவது வாய்ப்பில் இத்தாலி வீரர் பெனுஸி கோல் அடித்தார், ஆனால், இங்கிலாந்து வீரர் ராஷ்போர்ட் அடித்த கோலை இத்தாலி கோல்காப்பாளர் டோனாரூமா தடுத்துவிட்டார்.

4ஆவது வாய்பில் இத்தாலி வீரர் பெமார்டெஷி கோல் அடிக்க, இங்கிலாந்து வீரர் சான்சோ அடித்த கோலை டோனாரூமா தடுத்தார். கடைசி வாய்ப்பில் இத்தாலி வீரர் ஜோர்ஹின்ஹோ அடித்த கோலை இங்கிலாந்து கோல் காப்பாளர் தடுத்தார். இதனால் ஆட்டம் பரபரப்பானது.

இங்கிலாந்து அணிக்கு கடைசி வாய்ப்பில் புகாயோ சாகா அடித்த கோலை, கோல்காப்பாளர் டோனாரூமா தடுக்கவே வெற்றி இத்தாலி வசமானது.

இங்கிலாந்து வீரர்கள் அடித்த 3 சமநிலை தவிர்ப்பு கோல்களையும் தடுத்த இத்தாலி கோல்காப்பாளர் டோனாரூமா நாயகனாகி வெற்றிக்குக் காரணமாகினார். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் உலகக் கோப்பைக்கே தகுதி பெறாமல் தலைகுனிந்த இத்தாலி அணி கடந்த 60 ஆண்டுகளில் முதல்முறையாக வெளியேறியது.

ஆனால், இன்று ஐரோப்பாவில் மிகச்சிறந்த அணி என்ற பெருமையுடன் இத்தாலி தலைநிமிர்ந்து பீடுநடை போடுகிறது. காலச்சக்கரம் சுழன்று விட்டது, அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து 34 போட்டிகள் தோல்வி அடையாமல் வந்துள்ள அணி என்ற பெருமையையும் ரொபர்டோ மான்சினி தலைமையில் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தங்கக் காலணி விருது வென்றார் ரொனால்டோ!

லண்டன், ஜூலை 13

யூரோ கிண்ண உதைபந் தாட்ட தொடரில் தங்க காலணி விருதை போர்த்துக் கல் அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ வென்றார். இந்தத் தொடரில் அவர் பெறும் முதல் தொடர் நாயகன் விருது இதுவாகும்.

யூரோ கிண்ண உதை பந்தாட்ட தொடரில் சம்பி யனை இத்தாலி கைப்பற்றி யது. இந்தத் தொடரில் அதிக கோல்களை அடித்த வீரருக்கு வழங்கப்படும் தங்க காலணி விருது போர்த்துக்கல் வீரர் கிறிஸ்ரியானா ரொனால்டோவுக்கு வழங்கப்பட்டது.

இந்தத் தொடரில் ரொனால்டோ 5 கோல்களை அடித்தார். இதில், 3 கோல்களை பெனால்டி முறை யிலும் 2 கோல் களை ஹங் கேரி, ஜெர்மனி அணிக்காகவும் அடித்துள்ளார்.

ஒரு கோல் அடிக்க ரொனால்டோ பந்தைத் தட் டிக் கொடுத்துள்ளார். இந்த அடிப்படையிலேயே அவருக்கு தங்கக் காலணி விருது வழங்கப்பட்டது.

இதேவேளை, யூரோ கிண் ணத் தொடரில் அதிகமான கோல்களை அடித்த வீரர் என்ற வகையில் 14 கோல்களுடன் ரொனால்டோ முதலிடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)



# ஐ.சி.சியின் சிறந்த வீரர்: கொன்வே தெரிவானார்!

டுபாய், ஜூலை 13


ஐ.சி.சியின் ஜூன் மாதத்துக்கான சிறந்த வீரராக நியூஸிலாந்து அணியின் வீரர் கொன்வே தெரிவாகியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர், வீராங்கனை என்ற புதிய விருதை அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன்படி, கடந்த ஜூன் மாதத்தில் சிறப்பாக செயல்பட்ட நியூஸிலாந்து அணியின் வீரர் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதேபோல இங்கிலாந்து அணியின் சோபி சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## விம்பிள்டன் சம்பியனை வென்றதால்

# 20ஆவது கிராண்ட்ஸ்லம் வென்ற 3ஆவது வீரரானார் ஜொகோவிச்!



லண்டன், ஜூலை 13

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் சம்பியன் வென்றார். இது விம்பிள்டனில் அவரின் 6ஆவது பட்டமாகும். ஒட்டுமொத்தமாக இது அவரது 20ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். இதன் மூலம் 20 கிராண்ட்ஸலம் பட்டங்களை வென்ற 3ஆவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

முன்னதாக இந்த சாதனையை சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 2018இல் எட்டினார். தொடர்ந்து நடால் 2020இல் சமன் செய்தார். தற்போது இந்தப் பட்டியலில் ஜொகோவிச்சும் இணைந்துள்ளார்.

உலகின் முதல்நிலை வீரரான ஜொகோவிச், இறுதிப் போட்டியில் இத்தாலியின் மேட்டியோ பெரெட்டினியை 6-7 (4/7), 6-4, 6-4, 6-3 என்ற செற்களில் வீழ்த்தினார். இந்த ஆட்டம் 3 மணி நேரம் 24 நிமிடங்களில் முடிவுக்கு வந்தது.

பெரெட்டினி முதல் செற்றில் ஜொகோவிச்சுக்கு கடும் சவால் அளிக்க, சமநிலை தகர்ப்பு வரை சென்ற சென்றை செற்றை பெரெட்டினி வென்றார். ஆனால், அடுத்த செற் முதல் ஜொகோவிச் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார். இதனால், அடுத்த இரு செற்களும் அவர் வசமானது.

இதைத் தொடர்ந்து 4ஆவது செற்றையும் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் ஜொகோவிச். (ஐ)

# ஜோசப் உள்ளிட்ட தொழிற்சங்க தலைவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்!

## இலவசக் கல்வியை இராணுவ மயப்படுத்த ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

நுவரெலியா, ஜூலை 13.

"இலவசக் கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்துவதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். அதற்கு எதிராகக் கல்விச் சமூகத்தின் போராட்டம் தொடரும். அத்துடன், பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்."

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் வேலு இந்திரச்செல்வன் தெரிவித்தார்.

10 இற்கும் மேற்பட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து நுவரெலியாவில் நேற்று மாலை நடத்திய கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மாணவர்களுக்கான இலவசக்கல்வி உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நாம் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்திருக்கின்றோம். அந்தவகையில் இலவசக் கல்வியை தனியார் மற்றும் இராணுவ மயப்படுத்தும் அரசின் திட்டத்தையும் எதிர்க்கின்றோம்.

சேர் ஜோன் கொத்தலாவ பல்கலைக் கழகம் தொடர்பான சட்டமூலத்தை மீளப்பெறுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது எமது சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தோழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கிய நிலையில்கூட அவர்களைப் பலவந்தமாக தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் நிலையத்தில் உரிய வசதிகள் செய்துகொடுக்கப்படவில்லை. எனவே, மாணவர்களின் கல்வி உரிமைக்காகக் களமாடியவர்களை உடனடியாக அரசு விடுவிக்க வேண்டும்.



இது ஜோசப் ஸ்டாலினுக்கான போராட்டம் மட்டும் அல்ல. இலங்கை வாழ் மாணவர்களுக்கான போராட்டமும் கூட. இலவசக் கல்வியைக் காக்க நாம் தொடர்ந்தும் போராடுவோம். இணையவழி கற்பித்தலில் இருந்து விலகியுள்ளோம். நியாயம் கிடைக்கும் வரை அந்தப் போராட்டம் தொடரும்" - என்றார். (இ)

# என்னை மௌனிக்க செய்யவே முடியாது; ஒப்பந்தங்களில் நானே கைச்சாத்திட்டேன்!

## திலும் அமுனுகமவுக்கு தயாசிறி பதிலடி

கொழும்பு, ஜூலை 13.

"அரசியல் களத்தில் எவராலும் என்னை மௌனிக்கச் செய்யவே முடியாது. நான்தான் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளேன்."

- இவ்வாறு தெரிவித்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்களுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர.

"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறுவதால் அரசின் இருப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கடந்த பொதுத் தேர்தலில் "தாமரை மொட்டு" சின்னத்தில் போட்டியிட்டதாலேயே மக்களின் ஆதரவைப் பெற்றார்கள்" என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்திருந்தார்.

மேற்படி விமர்சனத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையி



லேயே இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்சவின் வெற்றியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பங்களிப்பும் உள்ளது. இதனைப் புரிந்துகொள்ளாமல், நன்றி மறந்து விமர்சிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு இல்லாதிருந்திருந்தால் கண்டி மாவட்டத்தில்கூட 50 ஆயிரம் வாக்குகளால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தோல்வியைச் சந்திக்க நேரிட்டிருக்கும் என்பதை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம போன்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆட்சியும் செய்கின்றது. அரசியலும் செய்கின்றது. ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இவ்விரண்டுமே இல்லாமல்போயுள்ளது. எனவே, என்னை எவரும் மௌனிக்க வைக்கமுடியாது. நான்தான் ஒப்பந்தங்களில் கைச் சாத்திட்டுள்ளேன்" - என்றார். (இ)

# கடும் காற்றால் 8 வீடுகள் சேதம்

பதுளை, ஜூலை 13



பதுளை மாவட்டம், ஹல்துமுல்ல - ஊவாதென்ன பிரதேசத்தில் நேற்று அதிகாலை வீசிய கடும் காற்றுக் காரணமாக 8 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வீடுகளின் மீது மரங்கள் முறிந்து விழுந்தமையால் கூரைத் தகடுகள் சேதமடைந்துள்ளன என்று ஹல்துமுல்ல அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார். (இ)

# மரண அறிவித்தல்



மலர்வு 18 - 01 - 1990

உதிர்வு 11 - 06 - 2021

## பீற்றர் இமானுவேல் அன்ரனி ஜெக்சன் (கண்ணா)

(வவுனியா - கனடா)

வவுனியாவைப் பிறப்பிடமாகவும், இந்தியா, கோயம்புத்தூர், சென்னை, கனடா Scarboroughஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பீற்றர் இமானுவேல் அன்ரனி ஜெக்சன் கடந்த 11.06.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான யோசப் மேரி ஸ்ரெல்லா (பெரிய பன்றிவிரிச்சான்) – விஸ்வநாதர் குஞ்சுப்பிள்ளை (செட்டிகுளம்) தம்பதியரின் அன்புப் பேரனும், பீற்றர் யோசப் – கமலநாயகி (கிளி) தம்பதியரின் பாசமிகு புதல்வரும், றொஷான் கிறிஷ்டி, கலையரசி, ஜோய் ஆகியோரின் அன்புச் சகோதரரும், துஸ்யந்தினி, கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹபிஷனா, றொய்ஸ்டன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 13.07.2021 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada என்ற இடத்தில் பார்வைக்குவைக்கப்பட்டு, பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை Westminster Cemetery, Mausoleum & Cremation Centre 5830 Bathurst St, North York, ON M2R 1Y6, Canada. என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு :
றொஷான் (சகோதரன்) - 0776769871
ஜோய் (சகோதரன்) - 0766605712
கூட்டி (சகோதரி) - 0012895524059

தகவல்
குடும்பத்தினர்.

# கொட்டியாகலை தோட்டத்தில் மேலும் 35 தொற்றாளர்கள்

நுவரெலியா, ஜூலை 13.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்டதையடுத்து தனிமைப்படுத்தப்பட்ட நுவரெலியா மாவட்டம், பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டியாகலை தோட்டத்தில் மேலும் 35 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

குறித்த தோட்டத்தில் 115 பேருக்கு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 35 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இ)

# திடீரென தோன்றிய இராவணனின் முகம்

## இராவணா எல்ல பகுதியில் பரபரப்பு

பண்டாரவளை, ஜூலை 13

பண்டாரவளை, எல்ல பகுதியில் அமைந்துள்ள இராவணா எல்ல நீர்வீழ்ச்சிக்கு அண்மித்த பகுதியிலுள்ள பாரிய கற்பாறையில் திடீரென முகமொன்று தோன்றியுள்ளது. இது இராவணன் மன்னனுடைய முகமாக இருக்கக்கூடும் என்று பிரதேச மக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

குறித்த கற்பாறையிலுள்ள ஒரு பகுதி இயற்கையாகவே உடைந்து விழுந்துள்ளது. அதன்பின்னரே குறித்த முகம் தோற்றியுள்ளது.

இப்பகுதியிலேயே இராவணன் புஷ்பக விமானத்தை நிறுத்தியுள்ளார் எனவும், அண்மித்த பகுதியிலுள்ள குகையிலேயே சீதையை மறைத்து வைத்திருந்தார் எனவும் அப்பகுதியிலுள்ள மக்கள் புராணக் கதைகளை மேற்கோள்காட்டி கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இதனைப் பார்வையிடுவதற்கு பெருமளவானோர் வருகை தருகின்றனர்.

அதேவேளை, இராமாயணம் என்பது கட்டுக்கதை எனவும், இராவணன் என்பவர் இலங்கையை ஆண்டதற்கான எந்தவொரு சான்றும் இல்லை எனவும் தொல்லியல் திணைக் களத்தின் பணிப்பாளர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## தேவை

நல்ல நிலையிலுள்ள
Pioneer, Technics, Kenwood, Sansui (original Japan only) Amplifier, Speakers, equalizer (sound system)
தேவை.
யப்பான் தயாரிப்பு மட்டும்.
T.P: 077 8757860

## ராஜபக்ஷ ...

இலங்கையின் நிதியமைச்சராக பஸில் ராஜபக்ஷ பதவியேற்றுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை இது, குடும்ப ஆட்சியை உறுதிப்படுத்தும் நடவடிக்கை எனவும் கூறியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் ஜனாதிபதியாக பதவி வகிப்பதுடன் அவரின் சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவி வகித்து வருகிறார். மேலும் மற்றுமொரு சகோதரரான சமல் ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் அமைச்சர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

சமல் ராஜபக்ஷவின் புதல்வர் ஷசீந்திர ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில், அண்மையில் அமெரிக்காவில் இருந்து திரும்பிய பஸில் ராஜபக்ஷ, நாட்டின் மிக முக்கிய அமைச்சுப் பதவிகளில் ஒன்றான நிதியமைச்சு பதவிக்கு நியமிக்கப்பட்டார். இவர்களை தவிர ராஜபக்ஷ சகோதரர்களில் தங்கையின் புதல்வரான நிபுண ரணவக்க பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து வருகிறார்.

இலங்கையின் அரசதுறையில் உள்ள நிறுவனங்களில் கிட்டத்தட்ட 80 வீதமான நிறுவனங்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனவென நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## யாழில்...

மனையில் 4 பேருக்கும், சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், யாழ். மாநகரில் ஒருவருக்கும், நொதேர்ன் தனியார் மருத்துவமனையில் ஒருவருக்குமாக 19 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, மன்னார் பொது மருத்துவமனையில் 2 பேருக்கும், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 2 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இது தவிர, வசாவிளான் தனிமைப்படுத்தல் முகாமில் 3 பேருக்கும், யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தின் தகவலின்படி பரந்தன் தனிமைப்படுத்தல் முகாமில் 4 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## வவுனியாவில்...

வருகின்றது.

அந்தவகையில், வவுனியாவின் திருநாவற்குளம் மற்றும் சாந்தசோலை ஆகிய பகுதிகளில் இருந்து இரு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு பரவலைக் கட்டுப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தற்போதைய கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியில் டெங்கு நோய் தாக்கமும் ஏற்பட்டுள்ளதால், நுளம்புகள் பெருகாத வண்ணம் பொதுமக்கள் தமது இடங்களை சுத்தமாக வைத்திருந்து நோய் தொற்றில் இருந்து தம்மையும், அயலவர்களையும் பாதுகாத்து கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

## நேற்றும்...

கப்பட்ட மேலும் 1,804 பேர் நேற்று குண மடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 46 ஆயிரத்து 241 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரத்து 252 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## ஜி.எஸ்.பி....

இவ்வாறு கூறினார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அரசாங்கத்தையும் இராணுவ வீரர்களையும் காட்டிக்கொடுக்க முயன்றவர்களே இவ்வாறு அவதூறு பரப்பி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டார். (அ)

## பிறந்த..

வெளிநாட்டில் வசிக்கும் நிலையில் இவர் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளார். இதையடுத்து தனக்கு பிறந்த சிசுவை எரித்துக் கொன்று அதன் உடலை பற்றைக்குள் எறிந்துள்ளார்.

தெருநாய்கள் அந்த உடலை வீதியில் கௌவி சென்ற நிலையில், இதை அவதானித்த அயலவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் விசாரணை நடத்திய பொலிஸார் சிசுவை பிரசவித்த தாயாரை கைது செய்துள்ளனர். (ஐ)

## தொற்றிலிருந்து...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளானதன் பின்னர் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதால் பயனில்லை. எனவே, வைரஸ் தொற்றிலிருந்து முழுமையாகக் குணமடைந்ததன் பின்னர் தடுப்பூசி போட்டுக்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மருத்துவர்களின் பரிந்துரைக்கு அமைய கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பிய பின்னர் 14 நாட்களுக்குப் பின்னர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும்.

நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட போதிலும் நாடு இன்னும் அவதானமான நிலையில் இருந்து மீளவில்லை.

பல மாதங்களுக்குத் தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளுக்குள் இருக்க முடியாது. நாடு முன்னேற வேண்டும்.

மற்றொரு கொரோனா அலையைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்களையும் நடைமுறைகளையும் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு மக்களை நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்" - என்றார். (இ)

## தனிமைப்படுத்தல்...

குறித்த சங் கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப் பினர் வைத்தியர் செனால் பெர்னாண்டோ மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை ஒழுங்காகப் பயன்படுத்தும் அதிகாரத்தையே பொலிஸ் உட்பட ஏனைய நிறுவனங்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மூலம் வழங்கப்பட்டுள்ளது.


தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒவ்வொரு அரசியல் தரப்புக்கும் தனிநபர்களுக்கும் விரும்பிய விதத்தில் சட்டத்தைப் பயன்படுத்த முடியாது.

தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பொலிஸார் துஷ்பிரயோகம் செய்வதென்றால், நாட்டினுள் 'ஒரே சட்டம்' என்ற கோட்பாட்டை பின்பற்ற முடியாது போகும்.

குறித்த சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுக்கொண்டுள்ளது" - என்றார். (இ)

# கடற்றொழில் அமைச்சின் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை



கொழும்பு, ஜூலை 13

'எக்ஸ் - பிரஸ்' பேர்ள் கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான முதற்கட்ட நட்ட ஈட்டை வழங்கும் செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா அதிகாரிகளுக்கு வழங்கினார்.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் துறைசார் பணிப்பாளர்களுடனான மீளாய்வுக் கலந்துரையாடலின்போதே மேற்குறித்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில், நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற களப்பு அபிவிருத்தி, வி.எம்.எஸ் கருவிகளைப் பொருத்துவதற்கான முதற்கட்டப் பயனாளர் தெரிவு உட்பட அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கேட்டறிந்த கடற்றொழில் அமைச்சர் வேலைத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

முன்பதாக 'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' கப்பல் விபத்துக்குள்ளானதால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கைகள் இந்த வாரம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதற்கான நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது எனவும் கூறியிருந்தார்.

அத்துடன் அனர்த்தத்துக்குள்ளான 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களுக்காக முதல் கட்டமாக 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாதிப்புக்கள் தொடர்பான முழு மையான மதிப்பீடுகள் துறைசார் நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மஹிந்தவை சந்தித்தார் துமிந்த

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோதாபாய ராஜபக்ஷவினால் அண்மையில் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்று சந்தித்தார்.

இந்த சந்திப்பு குறித்த படம் ஒன்றையும் துமிந்த சில்வா தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.



## சட்டவிரோத...

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய அந்த வீட்டைச் சோதனை செய்தபோது, அங்கு கூடை ஒன்றில் இரத்த கறைபடிந்த ஆடைகள் இருந்ததையும், அதனுடன் இணைந்ததாக சுமார் 7 மாதங்கள் மதிக்கத்தக்க பெண் குழந்தையின் சடலம் இருந்துள்ளதையும் பொலிஸார் கண்டுள்ளனர்.

சட்டவிரோதமாக இடம்பெற்ற கருக்கலைப்பின்போது இவ்விரு உயிரிழப்புக்களும் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், கருக்கலைப்பு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பெயரில் 35 வயதுடைய பெண் ஒருவரை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரியவகை...

தெரிவித்தனர்.

கைதானவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (ஐ)

## கொரோனா...

இந்த 31 கொவிட்-19 மரணங்களும் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 3533 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# இணையவழி கல்வியில் அரசுக்கு படுதோல்வி

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூலை13**

**நாட்டில் மாணவர்களின் இணைய வழிக் கல்வியில் இந்த அரசு பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் தலீசன் தெரிவித்தார்.**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது நடைமுறையில் உள்ள இணையவழிக் கல்வியை நிறுத்துமாறு அனைத்து ஆசிரியர் தொழிற் சங்கங்களும் அறிவித்துள்ளன. அதற்கமைய இணையவழிக் கல்வியை நிறுத்துகின்றோம்.

மாணவர்களின் இணையவழி கல்வியில் அரசு பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது. இதனடிப்படையிலேயே மீண்டும் பாடசாலை ஆரம்பிப்பது, பரீட்சைகளை நடத்தி சாதாரணமான நிலையில் அனைத்தும் உள்ளன என்று கூற அரசு முனைகின்றது.

மலையக மக்களது ஆயிரம் ரூபாய் சம்பளம் பெரும் பிரச்னையாக உள்ள நிலையில் அந்த மாணவர்களின் இணையவழிக் கல்வி சாத்தியமற்ற ஒன்று. இணைய வசதிகள் அற்ற நிலையில் மரத்திலும், கூரைகளிலும், மலைகளிலும் ஏறி ‘சிக்னல்’ பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது .இதில் மாணவர்களின் இணையவழிக் கல்வி என்பது 15 வீதமே சாத்தியமாகியுள்ளது” - என்றார். (இ)



## மரங்கள் முறிந்து விழுந்ததில் நான்கு குடியிருப்புகள் சேதம்

*இரத்தினபுரி, ஜூலை 13*

இரத்தினபுரி - பெல்மதுல்லை ரில்ஹேன தோட்டத்திலுள்ள தொடர் குடியிருப்பு ஒன்றின் மீது நேற்று பெரும் மரங்கள் முறிந்து விழுந்ததில் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதனால் நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மரங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த அனர்த்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான முதற்கட்ட உதவிகளை ஐக்கிய தொழிலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ். திருச்செல்வம் முன்னெடுத்து வருகின்றார்.

குறித்த தோட்டத்தில் குடியிருப்புகளுக்கு அருகில் பாரிய மரங்கள் காணப்படுகின்றன எனவும், இதனால் மழைக்காலத்தில் மிகுந்த அச்சத்துடனேயே வாழ வேண்டியுள்ளது எனவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, ஆபத்துமிக்க மரங்களை அப்புறப்படுத்துமாறு தோட்ட நிர்வாகத்துக்கும் கிராம சேவகருக்கும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## கிளிநொச்சியில் கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் படுகாயம்!

*கிளிநொச்சி, ஜூலை 13*

கிளிநொச்சி மாவட்டம், தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில் கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்த வெடி விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலாயுதபிள்ளை கிருஷ்ணகுமார் (வயது 35) என்ற நபர் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலைக்குக் எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## நீராவியடி பிள்ளையார் பொங்கல் விழா இன்று

*முல்லைத்தீவு, ஜூலை 13*

முல்லைத்தீவு, பழைய செம்மலை, நீராவியடிப் பிள் ளையார் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று இடம்பெறவுள்ள நிலையில், 10 பேர் மாத்திரமே கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.கோட்டைக் கேணி பிள்ளை யார் ஆலயத்தில் இருந்து, மடப்பண்டம் எடுத்துச் செல்லப்பட்டு, பொங்கல் விழா இடம் பெறவுள்ளது. (இ)

## அம்பாந்தோட்டை கடலில் கப்பலில் எண்ணெய் கசிவு

*கொழும்பு, ஜூலை 13*

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் எண்ணெய்க் கசிவு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துறைமுகத்துக்கு வந்த ஒரு வணிகக் கப்பலுக்கு எரிபொருள் நிரப்பும்போதே இந்த சம்பவம் இடம்பெற்றதென துறைமுக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

எண்ணெய்க் கசிவால் ஏற்படும் கடல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தி, சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கப்பட்டனவெனவும் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 - 07 - 1934 |  | 10 - 07 - 2021 |

### திருமதி கமலாம்பிகை சேதுநாதன்

*(முன்னாள் ஆசிரியை)*

யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட கமலாம்பிகை சேதுநாதன் அவர்கள் 10.07.2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மு.க.சின்னப்பா – பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் – சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற சேதுநாதன் அவர்களின் ஆருயிர்த் துணைவியும்,சிவா, சிவகலா, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும்,தயாளினி, நகுலநாதன், வானதி ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நாகரத்தினம், தனலட்சுமி, வாமதேவன், கனகலிங்கம், சண்முகலிங்கம், மகேஸ்வரி மற்றும் முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கந்தப்பிள்ளை, சரவணமுத்து, குழந்தைவேலு, செந்திநாதன், காமாட்சி, அமிர்தம், இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும்,தியாகராஜா– நாகேஸ்வரி(புஸ்பம்), காலஞ்சென்றவர்களான சின்னத்துரை– செல்லம்மா, காலஞ்சென்ற வைத்திலிங்கம் – அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சம்பந்தியும்,காயத்திரி, கஸ்தூரி, கபிலன், நிந்தியா, கவிஷ், லக்ஷா, கிஷான் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

**பார்வைக்கு**
Tuesday, 13 Jul 2021 6:00 PM - 9:00 PM,
Wednesday, 14 Jul 2021 3:00 PM - 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை**
Wednesday, 14 Jul 2021 5:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**
**குமார் - மகன்**
Mobile : +16473941206

**தகவல்:**
**குடும்பத்தினர்**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

பகல்
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-குட்டி,தோரணை திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு